**Mierra** Gems & Jewellery



லண்டனில் பொற்கை வண்ணர்களின் நிர்வாகத்தில் இயக்கும் ஒரே நகை மாடம்

**மீரா ஜுவல்லரி மார்ட்**

34, London Road, Tooting,
London SW17 9HP
Tel : 020 8648 7750 / 07958 948 685



A freely Circulated fortnightly

# புதினம்

**PUTHINAM**



HOMOEO CARE

லண்டனில் இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்

**டாக்டர். தியாகராஜன்**

Tel: 020 8767 8004,
07833 341 693 • 020 8144 1553



மலர் : 16 • 16-29 பிப்ரவரி 2012 | 16 ஆண்டுகளாக லண்டனில் தொடர்ந்து மாதமிருமுறை வெளிவரும் ஒரே தமிழ் இதழ் | இதழ் : 21



**MITHUS JEWELLERS**



லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் நகை மாளிகை

**322 London Road,**
**Croydon CRO 2TJ, 020 8683 1756**

22 காரட் தங்க, வைர நகைகளுக்கு நம்பிக்கையான இடம்


# மனிதநேய நடைப்பயணங்கள்

தமிழின உணர்வாளர்களினால் புலம் பெயர் தேசத்தில் முன்னெடுக்கப்படும் மனித நேய நடைப்பயணங்கள் மக்கள் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது. பிரித்தானியாவில் இருந்தும், பெல்ஜியத்தில் இருந்தும் ஜெனீவா ஐ.நா. சபை நோக்கிய நடைப் பயணங்கள் பெப்ரவரி 27ம் திகதியும், மார்ச் 5ம் திகதியும் வந்தடையும். எதிர்வரும் 27ம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாக உள்ள ஐ.நா. மனித உரிமை சபையின் கூட்டத் தொடரினை இலக்காகக் கொண்டு ஐ.நா. முன்றலில் பிரித்தானிய, ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு உரத்துக்கூறி உலகத்துக்கு, சிங்கள ஆட்சியாளர்கள் மீதான போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்துவார்கள் என்று நம்பலாம்.

பெல்ஜியத்திலிருந்து, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை நோக்கி நீதிக்கான நடை பயணம் மேற்கொண்டுள்ள மூவர், தொடர்ந்து வெட்டவெளிப்பிரதேசங்கள் ஊடாக கடும் குளிர் மற்றும் எதிர்காற்றுக்கு மத்தியில் நடந்து கொண்டிருக்கின்றனர். இதேவேளை லண்டனிலிருந்து கடந்த மாதம் 28ஆம் திகதி நடைபயணத்தை ஆரம்பித்த ஜெயசங்கர், சிவச்சந்திரன், போல் ஆகியோர் 16 ஆவது நாளாக தமிழர்களுக்கான நீதிக்கும் சமாதானத்துக்குமான நடைபயணத்தை பிரான்ஸ் ஊடாக மேற்கொண்டு வருகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளில் கடந்த சில நாட்களாக நிலவும் கடும் குளிரான காலநிலையை தமிழ் மக்கள் நன்கு அறிந்துள்ள பின்புலத்தில், தமிழீழ மக்களின் விடிவுக்காக, ஐரோப்பிய நாடுகளின் அரசியல் தலைவர்கள், மக்கள், மற்றும் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இலட்சியப்பயணம் மேற்கொள்ளும் இந்த உறவுகளுக்கு புலம்பெயர்ந்த மக்கள் தமது ஏகோபித்த ஆதரவை நல்கி வருகின்றனர்.

வேலுப்பிள்ளை மகேந்திர ராஜா, லோகநாதன் மருதையா மற்றும் ஜக்கமுத்து க்ராசியன் ஆகிய


தொடர்ச்சி 14ம் பக்கம்



தீபம் தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல் - 9ம் பக்கம் பார்க்க



ஹாய்ஷியத்தில் முதல் தமிழ் கடை

**BEST FOOD (ENS GROUP)**

30 Loampit Hill, Lewisham, London SE14 7SW
Tel : 020 8691 9811, 07466 69734

- முழுப்பங்கு இறைச்சி (2 கிலோ) - £11 பவுண்ட்ஸ் (கருவேப்பிலை இலவசம்)
- சனி, ஞாயிறு, செவ்வாய் உடன் மீன் £1.99 இலிருந்து
- கிங்ஸ் கறி பவுடர் (900 கிராம்) - £3.99
- 3 தேங்காய் - £1 பவுண்ட்
- லீலா மாவுகள் 2 வாங்கினால் 1 இலவசம்
- இதயம் நல்லெண்ணை 2 வாங்கினால் - £7 பவுண்ஸ்
- கத்தரிக்காய் - கிலோ £2.77

இலங்கை இந்திய துரித பணமாற்று சேவை **020 8692 1811**



**KULENDRAN IMMIGRATION LAW CHAMBERS**
**புதிய முகவரியில்**



**90, High Street, Colliers Wood, London,**
**SW19 2BT Tel No: 020 8542 8222**
**Fax: No:020 8542 8666 Mob: 07769 185 592**

கடந்த 17 ஆண்டுகளாக பிரித்தானியாவில் குடிவரவுத்துறையில் முன்னணி நிறுவனம்.

உங்கள் சகலவிதமான IMMIGRATION தேவைகட்கும்.



**aa** accounting & business solutions associates

CHARTERED MANAGEMENT ACCOUNTANTS
MANAGEMENT AND BUSINESS CONSULTANTS

For Efficient and Quality Professional Accounting Services



Also through our contacts, we are able to raise, Finance for Business.

265, Haydons Road, London SW19 8TY
info@aa-accounts.co.uk
www.aa-accounts.co.uk
020 8545 0205
07786 966207 (Sashi)
07747 794 358 (Uthayanan)

We specialise in:
- Year and accounts preparation
- Management accounts
- Solicitors accounts
- Book keeping
- Self Assessment and tax returns
- VAT and TAX investigations
- Payroll preparations
- Business Start up advice
- Business plans and cash flow forecasts
- Management consultancy



எந்நாளும் பொன் நாள் ஆகட்டும்

இலண்டனில் தரமான தங்கத்திற்கு... **LAKSHMIS** Jewellers



276, High Street North, London E12 6SA, UK
Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448

## BHARATHIAR UNIVERSITY

State University
Coimbatore. India.


# Distance and Continuing Education

**தொலைநெறித் தொடர்கல்வி மூலம் நீங்களும் பட்டதாரி ஆகலாம்.**

- B.A, B. Lit
- B.Com
- B.Sc Mathematics, B.Sc., Infomation Technology
- BBA Finance and accounting
- B.Social Work (B.S.W)
- M.A. Tamil, M.A. English, M.A. Sociology,
- M.A. Journalism
- M.Com, M. Social Work
- M.Sc Applied Psychology
- M.Sc Maths, M.Sc I/T
- MBA (15 disciplines)
- Diploma in Education

**Special WTSF Developed Courses**

- B.A. Applied Tamil
- PG Dip in Applied Tamil
- Dip. In Applied Tamil



இங்கிலாந்தில் இருந்தபடியே நீங்கள் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகத்தின் பரீட்சைகட்கு தோன்றி சித்திபெறும் அரிய வாய்ப்பை பயன்படுத்துங்கள். தொடர்ந்தும் தாய்மொழியிலே கற்று பரீட்சைகட்கு தோற்றமுடியும். மிகவும் குறைந்த செலவில் கற்கை நெறிகளும், பாட வழிகாட்டல்களும் வழங்கப்படும்.

The Centre is now approved and applications are accepted for this academic year until 10-2-2012.

பாரதியார் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஐரோப்பிய கிளை மேற்கண்ட பயிற்சி நெறி விண்ணப்பங்களை தகுதியானவர்கள் - அனுப்பி வைக்குமாறு கோருகின்றது.

மேலதிக தொடர்புகளுக்கு:

**WESTERN TAMIL SCHOOLS FEDERATION**

020 85400705, 07958408280, 020 8767 8004,

Email: degree@tamiled.co.uk;editor@londonputhinam.com

Web:www.tamiled.co.uk., http://www.b-u.ac.in

## தங்கப்பதக்க திருக்குறள் மனனப்போட்டி 2012

மேற்குலக தமிழ்ப்பாடசாலைகள் ஒன்றியத்தினால் [Western Tamil Schools Federation (WTSF)] இரண்டாவது வருடமாக நடாத்தப்படும் தங்கப்பதக்க திருக்குறள் மனனப்போட்டி எதிர்வரும் 18.02.2012 சனிக்கிழமையன்று சென்ற வருடம் நடைபெற்ற மேற்கு இலண்டன் தமிழ்ப்பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பங்குபெற்றும் மாணவர் தனது விண்ணப்பப் பத்திரத்துடன் £5.00களையும் தமது தமிழ்ப்பாடசாலைகள் ஊடாக 12.02.2012இற்கு முன்னர் 75 Middleton Avenue, Greenford, Middx UB6, 8BG என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.



போட்டி நடைபெறும் இடம்:
STANHOPE PRIMARY SCHOOL,
Mansell Road, Greenford. Middx UB6 9EG
போட்டி நடைபெறும் திகதி: 18.02.2012
சனிக்கிழமை காலை: 09.30 மணி



போட்டி விதிமுறைகள், விண்ணப்பப் பத்திரம், மற்றும் விபரங்கட்கு:
Mr. Joseph Vilvaraj 07958 408 280 info@tamiled.co.uk
Sivakumaran Tamil School - Croydon www.tamiled.co.uk
Mr. M T Selvarajah 07702954491 mtsrajah@hotmail.com
West London Tamil School - Greenford.
Mr. K Ariyaratnam 07801 723 538 Coventry Tamil School - Coventry

## சஞ்சிகை, பத்திரிகை, நூல்

வெளியிட வேண்டும் என்று விரும்புகிறீர்களா?

DTP • PROOF • LAYOUT • WRAPPER DESIGN • PRINTING

**இத்தனையும் ஒரே இடத்தில்...**

நீங்கள் சிறந்த வாடிக்கையாளர் என்றால் எங்களை நிச்சயம் தொடர்பு கொள்வீர்கள்!

SATYAN LAYOUT | 044-42663451 | 919551395516 | Tamilnadu | India
sathyanlayout@gmail.com



## 19வது ஆண்டாக கானக்குயில் 2012

Mrs yoga Thillainathan's

## KAANAKKUYIL 2012

The above competition will be held on June 30th 2012 (Saturday) at the Greenford Assembly Hall, Greenford, Middlesex, UB6 9QN

Applications are now invited.

The closing date will be on 31st March 2012.

Kindly fill in your following Information:

1. Name: 2. Address: 3. Gender: 4. Date of Birth: 5. Telephone: 6. Mobile: 7. E-mail id:
2. Two Tamil Cinema songs that you propose to sing: for sort-listing the candidates, we invite a voice cut either through a CD, audio - cassette or digitally recorded attachment to the e-mail.


you can record your song on computer, ipod, iphone or digital camera (video) and email along with your application to the following e-mail id: arumthill@hotmail.com

The singing must be at least two minutes of duration for your selected song.

By Post you can send your application to the following address:

Mrs. Yoga Thillainathan, 342, Ewell Road, Surbiton, Surrey KT6 7AX.

Contact Ph: No. 020 8251 0996 / 07903327708



## பரத நாட்டிய வகுப்புகள்

குஹொய்டன், வொலிங்டன் பகுதிகளிலுள்ள மாணவர் களுக்கு வசதியாக, வொலிங்டனில் பரத நாட்டிய வகுப்புகள் நடைபெறுகின்றன. நான்கு வயதிலிருந்து சேர்த்துக் கொள்ளப்படுவர்.
ஷர்மினி கண்ணன், 'நாட்டியாலா' நடன ஆசிரியை - 0790 4069 370


## புதினம்

PUTHINAM

மாதமிருமுறை இலவச இதழ்

ஆசிரியர்: ஈ.கே.ராஜகோபால்

அலுவலக முகவரி

**PUTHINAM**
38, Moffat Road, London SW17 7EZ
Tel: 020 8767 8004
Mob: 07735 346 890
E-Mail : editor@londonputhinam.co.uk

'ஈழகேசரி' வெளியீட்டு நிறுவனத்துக்காக 15 ஆண்டுகளாக தொடர்ந்து லண்டனில் மாதமிருமுறை வெளிவரும் ஒரே இலவச இதழ். தபாலில் பெற விரும்புவோர் முத்திரைச் செலவான £ 12.00 பவுண்டுகளை மட்டும் EELAKESARI என்ற பெயருக்கு காசோலையாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.


## லண்டனில் மீண்டும் தமிழக ஜோதிடர்

பிரபல தமிழக ஜோதிடர் பீஷ்மர் சித்தர் திருச்சி தில்லை நடராஜர் உங்களுடைய பிறந்த திகதியைக் கொண்டு ஐந்து நிமிடத்தில் குறிப்பு எழுதி கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம், படிப்பு, தொழில், திருமணம், அதிர்ஷ்டம் போன்றவற்றைத் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்கிறார்.

**நியூமோல்டன் முருகன் கோவில்**
(255 BURLINGTON ROAD, NEWMALDEN KT3 4NE)
MOB: 07960 734 968

# Vasuki Solicitors

**எல்லா சட்ட ஆலோசனைக்கும்...**

Asylum, Fresh Application, Deportation

**Vasuki Muruhathas**
10 Shakespeare Crescent, Manor Park, London E12 6 LN
Tel: 0208 470 6655 Mob: 07816 364 753

# அரசு தீர்வைத் தரும் என்று எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை!

கடந்த 64 வருட வரலாற்றின் பெரும் பகுதியை தமிழ் மக்கள் தமது உரிமை கோரி போராடியே காலத்தைக் கழித்துவிட்டனா. தமிழ் மக்களின் அனைத்துப் போராட்டங்களும் உரிமைக்கான பயணத்தில் தோல்விகளைக் கொடுத்தன என்பது உண்மையே. ஆனால் தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாஷை குறித்த பயணத்தில் நெஞ்சுறுதியுடன் இன்றும் இருகின்றனர்.

தென்னிலங்கையைப் பொறுத்து தமிழர்களுடன் அதிகாரங்களை பகிர்ந்து கொள்வது குறித்த விடயத்தில் இன்றும் அலட்சியப்போக்குடனும், அக்கறை இன்றியும் மனமின்றியும் இருக்கின்றது.

தனது இந்த நிலைப்பாட்டை இந்திய மற்றும் சர்வதேச சமூகத்தின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு மிக இலாவகமாக ஆறு தசாப்தங்களுக்கு மேல் முன்னெடுத்து வருகின்றது.

இதே நிலைமை மேலும் தொடர்வதற்கான அறிகுறிகள்தான் தென்னிலங்கை அரசியலில் மிகத் தெளிவாகத் தெரிகின்றனவே ஒழிய கடந்த கால நிலைப்பாட்டிலிருந்து மாறிக் கொள்வதாக இல்லை.

அரசாங்கத்தையும் தென்னிலங்கையையும் பொறுத்து சர்வதேச நெருக்குவாரங்களில் இருந்து எவ்வாறு தப்பிக் கொள்வது என்பது குறித்துத்தான் தீவிரமாக சிந்தித்து செயலாற்றுகின்றனவே ஒழிய அரசியல் தீர்வு குறித்து சிந்திப்பதாக இல்ல.

தமிழீழ விடுதலைப் புலிகள் இருக்கும் வரை சமாதானமோ, அமைதியோ, அரசியல் தீர்வோ சாத்தியமில்லை என்ற நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்திடம் இலங்கை அரசாங்கமும் தென்னிலங்கையும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தன. இந்தியாவினதும் சர்வதேச நாடுகளினதும் உதவிகளைப் பெற்று விடுதலைப் புலிகளைப் போரில் தோற்கடித்ததன் பின் அரசியல் தீர்வு குறித்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு வர வேண்டிய அரச தரப்பினர் இன்னும் இழுத்தடிப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தியாவும் சர்வதேசமும் அரச தரப்பினரின் தொடர் சித்து விளையாட்டுக்களை எவ்வளவு காலத்திற்கு கண்டும் காணாதது போல கண்களை மூடிக் கொண்டிருக்கப்போகின்றன என்பதே தமிழ் மக்களின் கேள்வியாகும்.

விடுதலைப் புலிகள் இருந்தபொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அரசாங்கத் தரப்பும் சரி, தென்னிலங்கையில் உள்ள சக்திகளும் சரி அவர்கள் மீது புலி முத்திரை குத்தி பிரசாரத்தை மேற்கொண்டன.

தற்பொழுது விடுதலைப் புலிகள் இல்லை. விடுதலைப் புலிகள் இல்லாத வடக்கு கிழக்கு மண்ணில் "ஜனநாயகத் தேர்தலை" இலங்கை அரசாங்கமே நடத்தியது. இந்த "ஜனநாயகத்தேர்தல்" மூலமே கூட்டமைப்பினரையும் மக்கள் வெற்றி பெறச் செய்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பினர். ஆனால் தறபொழுதும் கூட்டமைப்பினர் மீது புலி முத்திரை குத்தப்படுகின்றது.

இதில் விசித்திரம் என்னவெனில் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைவான காணி, பொலிஸ் அதிகாரங்களை கூட்டமைப்பினர் கோருவது கூட புலிகளின் கோரிக்கை என அரசாங்கத் தரப்பு சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரத்தை மேற்கொள்கின்றது.

13 ஆவது திருத்தச்சட்டம் இலங்கை- இந்திய அரசாங்கங்கள் கைச்சாத்திட்ட உடன்படிக்கையிலிருந்து பிரசவம் ஆகியதாகும். இந்த உடன்படிக்கையையோ அல்லது அதன் மூலம் உருவாகிய 13 ஆவது திருத்தச்சட்டத்தையோ விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. விடுதலைப்புலிகள் ஏற்றுக் கொள்ளாத ஒப்பந்தத்தை விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளாக்கி சிங்கள மக்களை திசை திருப்பும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது, அந்தளவுக்கு தென்னிலங்கை மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலான ராஜிவ் காந்தி - ஜே.ஆர். ஜயவர்தன கையெழுத்திட்டு 13 ஆவது திருத்தச் சட்டமாக உருவாக்கப்பட்டு அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களையே கோருகின்றது. விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளே அல்ல என்பதை தென்னிலங்கை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த 25 வருடங்களாக நிறைவேற்றப்படாதிருக்கும் ஒப்பந்தத்தின் பகுதிகளைத்தான் கூட்டமைப்பினர் நிறைவேற்றுங்கள் என்று கேட்கின்றனரே தவிர விசேடமாக உண்மையில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைக்கேற்ற அதிகாரப் பரவலாக்களை அவர்கள் இன்னும் கோரவில்லை என்பதையும் சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த ஒரு வருட காலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்திய அரசாங்கத் தரப்பும் கூட்டமைப்பினரும் தமிழ் மக்களையும் ஏமாற்றியுள்ளனர், சிங்கள மக்களையும் ஏமாற்றியுள்ளனர் என்பதுதான் உண்மை.

தற்பொழுது அரசாங்கம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவைத் தூக்கிப்பிடித்துக் கொண்டு நிற்கின்றது. கூட்டமைப்பினரை எப்படியாவது தெரிவிக்குழுவுக்குள் உள்வாங்கிக் கொள்ள வேண்டும் என்பதில் அரசாங்கத் தரப்பு கடும் பிரயத்தனத்தை மேற்கொண்டது. இது வெற்றியளிக்காமையினால் ஜனாதிபதி சகல நாடாளுமன்ற அரசியல் கட்சிகளையும் சந்தித்து பேசப் போவதாக அறிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடர் நெருங்க நெருங்க அரசாங்கமும் தனது நிலைப்பாட்டை ஒன்றொன்றாக மாற்றிக் கொள்ளத் தொடங்கியது. தற்பொழுது தீர்வு குறித்த யோசனைகளை அரச தரப்பு வைத்திருப்பதாகவும், அதனை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் சமர்ப்பிக்கவிருப்பதாகவும், கூட்டமைப்பினர் அடம்பிடிக்காது தெரிவுக்குழுவுக்கு வரவேண்டும் என்று பிரதி அமைச்சர் யாப்பா தெரிவித்துள்ளார்.

அரச தரப்பினர் தீர்வு யோசனைகளை கொண்டு இருப்பார்களாயின் ஏன் கடந்த ஒரு வருடமாக கூட்டமைப் பினருடன் நடத்திய பேச்சுவார்தையில் சமர்ப்பிக்கவில்லை என்று கேள்வி எழுப்புவதிலும் நியாயம் உண்டு.

அரச தரப்புடன் ஒரு வருட காலமாக நடத்திய பேச்சு வார்த்தையில் தீர்வு குறித்து ஒரு அங்குலம் கூட நகரவில்லை எனக் கூட்டமைப்பின் பேச்சாளரான சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. கூறியபொழுது, அரச தரப்பு இதற்கான பதிலைச் சரியான முறையில் அளிக்கத்தவறியுள்ளது. அது மாத்திரமல்ல, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு 'வாருங்கள் பேசுவோம்' என்று கூறுவது, அரச தரப்பின் நம்பிக்கையை மீணடும் ஒரு முறை கேள்விக் குறியாக்கி உள்ளது.

அரச தரப்பைப் பொறுத்து, தீர்வு என்பது முக்கியல்ல. சர்வதேச நெருக்குவாரங்களில் இருந்து எவ்வாறு தன்னைக் காப்பாற்றிக் கொள்வது என்பதிலேயே அதன் முழுக்கவனமும் உள்ளது.

எனவே, அரசாங்கம் தீர்வைத் தரும் என்று தொடர்ந்தும் எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை.

சர்வதேசமும், இந்தியாவும் அவர்கள்

பார்வையிலான 'பயங்கரவாதத்தை' தோற்கடிக்க உதவியதுபோல், அரசியல் தீர்வை அரசாங்கத்திடமிருந்து கறந்து கொடுக்க முன் வரவேண்டும். இதுவே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

**- வி.தேவராஜ்**




## Dr.D.V.PALANIVELL

# MATRIMONIAL SERVICES

Applicants must be already living in the UK for a number of years and have high ranking professional jobs and no time wasting people.I will be a mediator to pass and relay information. You contact me via email and request me what raasi (Horoscope) you are interested.If I get a suitable match I will get your permission by email before your identity is released.In reality it I you first contact the other party for photograph and subsequent meetings where ever you like,I prefer parents present for the first meeting.Sleeping together is no…no..no..before wedding.

You need to email me the full name and horoscope and request me the origin of parents home town in Srilanka.

**GROUP (A)PARENTS BIRTH PLACE IN SRILANKA**

- THALAYADI,PT.PEDRO,VIYAPARIMOOLAI,POLIKANDI,VVT,THONDAIM ANAR,MAILIDDY,KKS,SUTHUMALAI,PART OF THELLIPALAI ETC.

**GROUP(B)PARENTS TOWN ORIGIN IN SRILANKA:**

- NALLUR,KALVIYANKADU,PUTHUR,NEERVALY,VANNAR PANNAI,KARAIVEDDI,UDUPPIDDY
- SOMETIMES IT IS DIFFICULT TO WRITE IN ANEWSPAPER BUT YOU CAN OPENLY TELL ME IN EMAIL..
- WE CANNOT PUT IN A AND B.THERE COULD BE VARIOUS OTHER GROUP YOU CAN EMAIL TO ME CONFIDENTIALLY.

I NEED TO SEE YOUR UK CITIZENSHIP/PERMANENT RESIDENCY STATUS AND NEED SCANNED DOCUMENT ATTACHED TO EMAIL. DO NOT FAKE DOCUMENTS.IN THE PAST 5% APPLICANTS WERE CONFUSING ME THE TAKE DUPLICATED COPY OF A FRIEND THEN USE TECHNOLOGY TO FAKE DOCUMENT, AND NEVER CALL THE GIRL FOR PRIVATE MEETING AND TRY CHARMING AND LEAD TO SEX.

SEX AFTER WEDDING ONLY AND AFTER PARENTS AND GRAND PARENTS BLESSING ONLY.

DO NOT ASKME TO LEAK CONFIDENTIAL INFORMATION.IF HOROSCOPE TALLY I WILL CONFIRM YOUR VIEW BEFORE GIVING THE CONTACT INFORMATION.THENPARENTWILLMEETYOUTOSHOWTHEPHOTO,ORIGINALS OF THE JOB,IMMIGRATION AND DEGREE

CERTIFICATE IN A PLACE MUTUALLY AGREED, THEN ONLY BOY AND GIRL MEET AND PARENT STAYING ABOUT 20 YARDS NEARBY, YOU TALK FOR 30 MINUTES,THEN YOU DECIDE WITH PARENTS FOR OTHER MEETING

THERE WILL BE ONE OFF PAYMENT OF £50 PAYABLE TO: D.V.PALANIVELL FOR 2 YEARS OF SERVICE VIA EMAIL AND TELEPHONE.

I WILL MONTHLY ADVERTISE IN TAMIL NEWS PAPERS "PUTHINAM" AND "KAALAIKATHIR" WHICH HAVE 5000 COPIES CIRCULATED IN UK.

**I AM CREATING A SPECIAL WEBSITE VERY SOON.**

**MY ADDRESS:79 MEADFIELD ROAD, LANGLEY,BERKSIRE, SL3 8HY**

MY AGENCY IS NOT A SPECIALIST IN DIVORCEE AND REMRRIAGE CATEGORY.I ONLY DEAL WITH FIRST TIME MARRIAGES.IF YOU SEND ME PHOTOCOPY OF YOUR DOCUMENTS WHICH IS IMMIGRATION STATUS,DEGREE CERT,EMPLOYMENT STATUS,THEN YOU SHOULD SHOW THE OTHER PARTY ON YOUR FIRST MEETING.PARENTS ARE CONCEREND AND DO NOT THING IT AS AN INSULT IF YOU ARE ASKED.

**My email: dvpalanivell@gmail.com Mobile:07506153885**

I WISH GOOD LUCK IN FINDING YOUR PARTNER. GOD BLESS US.



# ஈழத்தமிழ் எழுத்தாளர்களுக்கு தமிழகத்தில் கிடைத்த கௌரவம்



–கே.ஜி.மகாதேவா

"தமிழ் ஈழம் என்பது கனவு அல்ல. இதை நான், நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற மாநாட்டில் கூறியபோது, இலங்கையிலிருந்து வந்த பௌத்த குருமார்கள் சந்தேக கண்ணுடன் நோக்கினார்கள். உங்கள் எண்ணம் வெறும் பகல் கனவு என்றார்கள். நோர்வே உதயமும் கனவுதான் என்று அவர்கள் கருத்து வெளியிட்டதும் நான், "நோர்வேயும் ஒரு கனவாகத்தான் அன்று இருந்தது. சுவீடனும் நோர்வேயும் அன்று ஒன்றாகத்தான் இருந்தாலும் இன்று நோர்வே தனிநாடாக மலர்ந்து விட்டது. அதுபோல தமிழ் ஈழம் என்ற தனிநாடு உருவாகும்" என்று அந்த பௌத்த குருமார்களிடம் நம்பிக்கையுடன் கூறினேன். "சொந்த மண்ணிலேயே தமிழ் இனம் கறுவறுக்கப்பட்டுள்ளது. இந்தக் கொடுமைகள் எல்லாம் பதிவு செய்யப்பட்டு உலகம் முழுவதும் பரவ வேண்டும். உலகத்தின் மனச்சாட்சி இன்று கொஞ்சம் கொஞ்சமாக விழிக்க ஆரம்பித்திருக்கிறது. சிந்தப்பட்ட குருதித் துளிகள் நிச்சயம் பேசும்" என்று சென்னை தியாகராய நகர், சர் பிட்டி தியாகராயர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழக முன்னணி எழுத்தாளர் அருணகிரியின் மூன்று நூல்கள் வெளியீட்டு விழாவில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நூல்களை வெளியிட்டு வைத்து உரையாற்றுகையில் கூறினார். 'ஈழத்தமிழ் எழுத்தாளர்கள்', 'ஆல்ப்ஸ் மலையில் அருணகிரி,' 'உலக வலம்' என்று மூன்று நூல்களை அருணகிரி எழுதியிருந்தார். 'ஈழத்தமிழ் எழுத்தாளர்கள்' நூலை தமிழருவி மணியன் பெற்றுக் கொண்டார். ஈழத்தின் பதினேழு படைப்பாளிகளின் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது.

'ஆனந்த விகடன்' பிரசுரமாக வெளிவந்த 'ஈழத் தமிழ் எழுத்தாளர்கள்' நூல் பற்றி பதிப்பாசிரியர் தமது முன்னுரையில், "பெண்கள், பெற்ற குழந்தைகளின் எதிரிலேயே பாலியல் கொடுமைகளுக்கு ஆளாவது, மனித உடலின் அந்தரங்க இடங்களில் ஆயுதம் வைத்து வெடிக்கச் செய்வது, எப்போது உயிர் போகுமோ என பதற்றத்தோடு வாழும் அகதிகளின் அவலம்..... இவையே ஈழத்தின் எழுத்தை ஆள்பவர்கள், தலைப்பில் இன்றைய ஈழத்தின் அடையாளம்! வாழ்க்கையைத் தொலைத்துக்கட்டி, ஓர் இனத்தின் அமைதியை ஆழ்குழியில் புதைத்துவிட்டு, ஆயுதங்களுடன் கோரத்தாண்டவமாடி, இலங்கை ராணுவம் பலியிட்ட ஈழத் தமிழர்கள் உயிர்கள் எண்ணிலடங்கா! அக்கிரமக்கார அரசுக்கு அடிபணிந்து, ஈழத்து மண்ணும், மக்களின் மனமும் வறண்டு போகலாம், ஆனால், பட்ட துயரங்களைத் துடைத்தெடுக்க முயற்சிக்கும் ஈழத்து எழுத்தாளர்களின் எழுத்து, இன்னும் அந்த மக்களுக்கு எழுச்சி தந்து, பிரவாகமாகப் பொங்கிக் கொண்டுதான் இருக்கிறது. ஆம்! மரணங்களே வாழ்வாகிப்போன மண்ணைக் கருவாக்கி, மனிதநேயம் மிக்க எழுத்தாளர்கள் உருவாக்கும் ஈழத்தின் இலக்கியங்கள் வீரியம் மிக்கவை! உறைவிடத்தை இழந்தாலும், தம் உணர்வுகளை நிலைநாட்டும் எண்ணத்தில் தாய் மண்ணை விட்டு பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்த எழுத்தாளர்கள் அநேகர். உயிருக்குப் போராடும் மனிதர்கள் மத்தியில், 'அவர்களின் அவலநிலை இன்று மாறும், நாளை மாறும்', என, தங்கள் எழுத்தின் மூலம் தங்களின் ஆதங்கத்தை வெளிப்படுத்தும் ஈழத்து எழுத்தாளர்களின் ஒட்டுமொத்த உணர்ச்சிக் குவியல்தான் இந்த நூல். ஈழத்தமிழர்களுடைய உணர்வுகளைப் பதிவு செய்யும் வகையில், ஈழத்து எழுத்தாளர்கள் சிலரின் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார், 'ஈழத் தமிழ் எழுத்தாளர்கள்' நூலாசிரியர் அருணகிரி" என்று குறிப்பிட்டுள்ளார்.

**"ஈழத்தமிழ் எழுத்தாளர்களை அங்கீகரிக்கின்றோம்" - வை.கோ :-** 'ஈழத்தமிழ் எழுத்தாளர்கள்' நூலை வெளியிட்டுவைத்து வைகோ கூறியதாவது :-

"தாய்த் தமிழகத்து எழுத்தாளர்களை தமிழ் ஈழம் போற்றியது, வரவேற்றது, குதூகலித்துக் கொண்டாடியது. ஆனால் ஈழத்தமிழ் எழுத்தாளர்களை, புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களை தமிழகம் ஏன் பற்றிக் கொள்ளவில்லை? துன்பத்தின் பிடியில் பரிதவிக்கும் ஈழத்துப் படைப்பாளிகளுக்கு உரிய அங்கீகாரத்தையும், ஆதரவையும் தரவேண்டிய கடமையில் தாய்த் தமிழகம் தவறிவிட்டது

'ஆனந்த விகடன்' பிரசுரமாக வெளிவந்த 'ஈழத் தமிழ் எழுத்தாளர்கள்' நூல் பற்றி பதிப்பாசிரியர் தமது முன்னுரையில், "பெண்கள், பெற்ற குழந்தைகளின் எதிரிலேயே பாலியல் கொடுமைகளுக்கு ஆளாவது, மனித உடலின் அந்தரங்க இடங்களில் ஆயுதம் வைத்து வெடிக்கச் செய்வது, எப்போது உயிர் போகுமோ என பதற்றத்தோடு வாழும் அகதிகளின் அவலம்.....

என்பது உண்மைதான். ஈழத்தமிழ் எழுத்தாளர்களின் கருவூலங்களைத் தேடி, அவற்றை அறிவதிலும், அவர்களோடு பேசிப் பேசி பதிவு செய்வதும், இதனை அனைவரும் அறிய வேண்டும் என்று ஆசைப்படுவதும் ஆருயிர்த்தம்பி அருணகிரியின் உடன் பிறந்த குணம். மானமும், வீரமும், வேட்கையும் கொண்டு வாழ்வது ஈழத்தமிழ் மண். அந்த எழுத்தாளர்களையெல்லாம் தேடி அலைந்து பார்த்த தம்பி அருணகிரி, அவர்களின் உணர்வுகளை எல்லாம் அச்சுப்பிசகாமல் பதிவு செய்திருப்பதைப் படித்து பெருமைப்படுகின்றேன். பதிவு செய்வது பாரிய கடமை. இதன்மூலம், தமிழ்நாட்டில் ஈழத் தமிழ் எழுத்தாளர்களை அங்கீகரிக்கின்றோம் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மேடையில், தமிழ் ஈழ தேசியக் கவிஞன் உணர்ச்சிக் கவிஞர் காசி. ஆனந்தன், எழுத்தாளர் நவம்மாஸ்டர், பத்திரிகையாளர் கே.ஜி.மகாதேவா ஆகியோரும் நம்மோடு அமர்ந்து இந்த நிகழ்ச்சியை சிறப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மூவரும் மட்டக்களப்பு மண்ணைச் சேர்ந்தவர்கள். நமது உணர்ச்சிக் கவிஞர் காசி.ஆனந்தன், பாவேந்தர் பாரதிதாசனுக்கு அருகில் இருந்ததால், சந்தனக் காட்டில் இச்சவுக்கும் மணத்தது என்கிறார். அது தன்னடக்கம். நீங்களும் சந்தன மரம்தான். 'நவம்மாஸ்டர் அவர்களுக்கு 1961-ம் ஆண்டிலேயே அவர் எழுதிய 'நந்தாவதி' கதைக்கு, 'கல்கி' இதழ் முதல் பரிசு வழங்கியிருக்கிறது. நம்முடைய கே.ஜி.மகாதேவா ஒரு பத்திரிகையாளர். யாழ் 'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றி இருக்கின்றார். திருச்சியில் வசிக்கும் எழுத்தாளர் கே.ஜி.மகாதேவா, தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் உள்ள உறவுகளை அவரது எழுத்துக்கள் மூலம் சொல்கிறார்." என்று மேடையில் அமர்ந்திருந்த மூன்று படைப்பாளிகளையும் பற்றி குறிப்பிட்டதுடன், நூலின்

"தாய்த் தமிழகத்து எழுத்தாளர்களை தமிழ் ஈழம் போற்றியது, வரவேற்றது, குதூகலித்துக் கொண்டாடியது. ஆனால் ஈழத்தமிழ் எழுத்தாளர்களை, புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களை தமிழகம் ஏன் பற்றிக் கொள்ளவில்லை? துன்பத்தின் பிடியில் பரிதவிக்கும் ஈழத்துப் படைப்பாளிகளுக்கு உரிய அங்கீகாரத்தையும், ஆதரவையும் தரவேண்டிய கடமையில் தாய்த் தமிழகம் தவறிவிட்டது

அணிந்துரையில், அந்தப் பதினேழு படைப்பாளிகள் குறித்து கருத்துக்களைச் சிறப்பாக வெளியிட்டுள்ளார்.

**காசி.ஆனந்தன் வெளியிட்ட தமிழ் மக்கள் புள்ளி விபரம்** உணர்ச்சி கவிஞர் காசி.ஆனந்தன் மதுரையில்;

"1948-ல் 15,000 சதுர மைல்கள், சிங்கள ஸ்ரீலங்கா ஆகவும், 10,000 சதுர மைல்கள் தமிழ் ஈழமாகவும் இருந்தது. வெள்ளையன் வெளியேறிய உடனேயே சிங்கள ஆட்சியாளர்கள் நிர்வாக வசதியின் பொருட்டு 2,000 சதுர மைல்களை சிங்களப் பகுதிகளாக மாற்றினார்கள். சிங்களர்கள் 17,000 சதுர மைல்களானார்கள். நாங்கள் 8,000 சதுரமைல்களாகத் தேய்ந்தோம். கடந்த 60 ஆண்டுகளில், சிங்களர்களை எங்கள் தமிழ் ஈழத் தாயகத்தில் திட்டமிட்டுக் குடியேற்றி, மேலும் 3,000 சதுர மைல்களை சிங்கள ஸ்ரீலங்காவாக மாற்றிவிட்டனர். நாங்கள், 5,000 சதுர மைல்களாக சுருங்கி நிற்கிறோம். அன்றைக்கு 55 லட்சமாக இருந்த சிங்களர்கள் இன்று ஒன்றரைக் கோடியாக வளர்ந்துவிட்டனர். நாங்கள் அன்றைக்கும் 35 லட்சம், இன்றும் 35 லட்சம் என்றால், இந்த அறுபது ஆண்டு காலத்தில் தமிழ் ஈழத் தாய்மார் குழந்தைகளே பெறவில்லையா? ஒரு தேசிய இனத்தின் முதன்மைக் கூறு என்பது அதன் நிலம். அடுத்த கூறு அந்த மண்ணின் மொழி. இன்னொன்று அந்த மக்கள். இன்று என்ன மிஞ்சி இருக்கிறது....?" என்று தொடுத்த வினா எழுந்ததும், மண்டபம் நிறைந்திருந்த மக்கள் மத்தியில் அத்தனை நிசப்தம்.

**எஸ்.பொ.உள்ளக்குமுறல்: படம் பிடித்துக் காட்டப்பட்டது:-** இலக்கியப் பேராசிரியர் எஸ்.பொ.வின் நேர்காணல் 'ஈழத்தமிழ் எழுத்தானர்கள்' நூலில் முதன்மை பெற்றிருந்தது. இந்த நூலைப் பெற்றுக் கொண்ட தமிழருவி மணியன், "எஸ்.பொ. ஒரு முதன்மை இலக்கியவாதி என்றும், எந்தக் கருத்தையும் துணிச்சலுடன் விளக்கமாகக் கூறும் அவர், தற்பாதுகாப்புக்காக மௌனவிரதம் இருப்பதைவிட, உண்மையைச் சொல்லி அதற்காக சிலுவையில் அறையப்படுவது மேல் என்றும், அழகும், சத்தியமும், உண்மையின் வீச்சும் கொண்டதாக எழுத்து பளிச்சிடவேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றார்" என்று கருத்து வெளியிட, நூலை வெளியிட்ட வைகோ, கடந்த ஆண்டு கனடாவில் விருது பெற்ற எஸ்.பொ.வின் உள்ளக் குமுறலை படம்பிடித்துக் காட்டினார். "என்னுடைய தமிழன் வாழக்கை? உன் நிலம் இல்லை, கடல் இல்லை, வானம் இல்லை, எதுவுமே இல்லை. சிங்களர்களின் ஊழிக்கூத்திலிருந்து ஈழத்தை மீட்போம். யூதர்கள் வேட்டையாடப்பட்டார்கள். அவர்கள் அருகில் அவர்களைச் சார்ந்தவர்கள் யாரும் இல்லை. ஆனால் இங்கே, தமிழர்களின் பூர்வீக மண்ணில் அவர்களை அழிக்கின்ற கொடுமைகளைச் செய்கிறான் சிங்களன். காந்தி மண்ணிலிருந்து கொடுக்கப் பட்ட ஊக்கத்தின் காரணமாக, அவர்கள் செய்த துரோகத்தின் காரணமாக எங்கள் மண்ணில் எங்கள் மக்கள் படுகொலைக்கு ஆளானார்கள்...." என்று எஸ்.பொ.வின் ஒரு முகத்திலிருந்து பீறிட்ட இரத்தக் குற்றச்சாட்டுகளை அடுக்கி, வைகோவே அதற்கு வேதனையுடன் குமுறுகிறார். "கூப்பிடு தொலைவில் இங்கே நாம் எட்டுக் கோடிப்பேர் இருக்கின்றோம். இங்கேயிருந்து நீந்தியே சென்றிருக்கிறார்கள் ஒரு காலத்தில்! கரிகாலன் படை நடத்தினான். 'கல்கி' வருணித்த அருள்மொழிவர்மனின் கப்பல்கள் அணிவகுத்துச் சென்ற கடல் தான் இது. அங்கும் இங்கும் எவ்வளவு தூரம்? எல்லாமே நிறைவேறும்" என்று நம்பிக்கை கூறி, அதற்கு ஆதாரமாக் எஸ்.பொ. கனடாவில் வெளியிட்ட, "சரிக்கப்பட்ட இனமாக இரண்டாயிரம் ஆண்டுகளாக, அகதிகளாக நாட்டுக்கு நாடு அல்லாடித் திரிந்த யூத இனத்துக்கு இன்று, இஸ்ரேல் என்ற ஒரு நாடு கிடைத்துவிட்டது. தமது எபிரேய மொழியை மீட்டு அரச மொழியாக்கி இருக்கிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளாக வழக்கற்று இருந்த மொழி, பயிலப்பட்ட மண்ணிலே இஸ்ரேல் நாட்டை அமைத்திருக்கிறார்கள். இப்போதும், இஸ்ரேலைவிட அமெரிக்காவில்தான் அதிக யூதர்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய ஓர்மம், பணம், சாதுர்யம் இவை அனைத்துமே இஸ்ரேல் மலர்வதற்குப் பெரும்பங்கு வகித்தன. உலகில் தமிழ் ஈழர் அதிக அளவில் வாழ்கின்ற நாடுகளிலேயே கனடாதான் முதல் இடம் வகிக்கிறது. அமெரிக்க யூதர்கள், யூத இனத்துக்காகச் சாதித்ததைப் போன்று தமிழ்க்குடி மக்களான நீங்கள் தமிழ் ஈழருக்காகச் சாதித்துத் தருவீர்கள் என்பதை இந்தச் சபையிலே எதிர்வு கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்" எனும் எஸ்.பொ.வின் வைர வரிகளை மீள்வாசித்து, மேடையிலிருந்த காசி.ஆனந்தன், நவம், கே.ஜி.மகாதேவா மூவருக்கும் பொன்னாடை போர்த்தி ஒரு பாரிய பூலோக உருண்டையை வைகோ கையளித்தார்.



# உங்களுக்கு எப்படி?

நவகிரஹங்களின் ஆதிபத்திய, ஆகர்ஷண, சக்திகள் அந்த கிரஹங்களின் தன்மைகளுக்கு ஏற்ப, புதுவருஷ பிறப்புகளில், கிரஹப் பெயர்ச்சி காலங்களில், ஜாதக ரீதியாக என் கணித ரீதியாக, எமக்கு பலா பலன்களை தருகின்றன. ஒவ்வொருவர்களுக்கும், தமது எதிர்காலம், அதிஷ்டமாக, சிறப்பாக அமைய வேண்டும் என்கின்ற எதிர்பார்ப்பு அதிகமாகவே அமைந்திருக்கும். பொதுவாகவே எண் கணித ஜோதிடத்தின் மூலமாக அதன் அதிஷ்ட தன்மைகளை, தமது ஜாதக நிலை ராசியுடன் சேர்ந்து செயற்படுத்துகின்றபோது அதன் அதிஷ்டபலன் மிகவும் சிறப்பாக அமையும் நிலை உண்டு. உதாரணமாக ஒருவர் தான் பிறந்த திகதியின், ஆதிபத்திய கிரஹத்தின் அதிஷ்ட ரத்தினக்கல் அல்லது அதிஷ்ட நிறம் என்பனவற்றை தம்மோடு இணைத்துக் கொள்ளும்போது அதன் அதிஷ்டம், சிறப்புடைய புகழ், சமூக அந்தஸ்தை கொடுக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

உதாரணமாக 8ம் எண்ணும் துலாம் ராசியும் கொண்ட மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். எட்டாம் எண் சனீஸ்வரனுக்கு உரிய கறுப்பு கண்ணாடி, துலாம் ராசி சுக்கிரனுக்கு உரிய வெள்ளை நிறத் தொப்பி, கூட்டு எண் 9க்கு உரிய பவள கல் பதித்த மோதிரம் என்பன அணிந்து கொண்டார். அடுத்த தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி 3ம் எண்ணிற்கு உரிய மஞ்சள் நிற சால்வை தோளில் போட்டுள்ளார் (குருவிற்கு உரிய) மிருக சீரிட நட்சத்திரம் அதற்குரிய கிரஹ செவ்வாயின் பவளக்கல் மோதிரம் அணிந்துள்ளார். இடபராசி, சுக்கிரனுக்கு உரிய வெள்ளை நிற வேஷ்டியே அவரின் நிரந்தர உடை. தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தனது 6ம் எண்ணிற்கு உரிய பச்சை நிற உடை அணிகின்றார். சிம்மராசிக்கு உரிய சிகப்பு நிற குங்குமம் மெலிதாய் எப்போதும் நெற்றியில் இட்டுக் கொள்வார். எமது நாட்டின் ஜனாதிபதி மகிந்த ராஜபட்ச அவர்கள் தனது 9ம் எண்ணிற்கும், மேஷராசிக்கும் உரிய சிகப்பு நிற துண்டு கழுத்திலே போட்டிருக்கின்றார். எனவே சமூக பிரபல்யம் பெற்ற எல்லோருமே ஜோதிட நிலையில் நம்பிக்கையோடு செயற்பட்டு வெற்றியும் பெற்று இருக்கின்றார்கள். 2012ம் ஆண்டு 5ம் எண் ஆதிபத்தியத்திலும், கூட்டு எண் 7ம் எண்ணிலும் வார எண் 1ம் எண்ணிலும் அமைகின்றது. எனவே 5ம் 7ம் 1ம் எண்களின் ஆதிபத்தியம் இந்த 2012ம் ஆண்டில் அமைகின்றது. இந்த எண்களினுடைய தொடர்பு கொண்டோர்க்கு சிறப்புப் பலன் அமையும். மற்றயோரும் அதற்குரிய அதிஷ்ட எண்களின் நிறம், அதிஷ்டரத்தினம் போன்றவற்றை அணிந்து வெற்றிகளை பெறுவோம்!

**1 10 19 28**


திகதிகளில் பிறந்தவர்கள்

## முகமலர்ச்சியும் முதன்மை செயல்பாடும் கொண்ட முதலாம் என் அன்பர்களே



கலாநிதி துன்னையூர் - ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்
(சாரதாபீடம் ஜோதிடம் கொழும்பு.
(009411) 2554328, 0777915625)

2012ம் ஆண்டு உங்களுக்கு மிகச் சிறப்பானதாக அமைகின்ற நிலை உண்டு. உங்களுக்கு அனுகூலமான 5ம் எண்ணில் 2012ம் ஆண்டு அமைகின்றது. ஆண்டின் கூட்டு எண் 7ம் எண்ணிலும் ஆண்டின் வார எண் 1ம் எண்ணிலும் அமைகின்றது. எனவே எல்லா வகைகளிலும் எண் ஜோதிட நிலையிலே உங்களின் எதிர்பார்ப்புகள் சிறப்புற அமைகின்ற நிலை உண்டு. தொழில் நிலைகளில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். புதிய தொழில் முயற்சிகளில் வெற்றிகள் அமையும் பலனுண்டு. குடும்பத்தில் மகிழ்வும், சுப காரிய நிலைகளும் ஏற்படும் பலன் உண்டு. பணவரவு திருப்திகரமான நிலையிலே ஏற்படும் நிலை உண்டு. திருமணம் போன்ற சுப காரிய நிலைகளை எதிர்பார்க்கின்றவர்கட்கு அப்பலன் பூரண மாக அமையும் நிலை உண்டு. வழக்கு விவகாரங்களில் நல்ல வெற்றிகள் ஏற்படும் நிலை உண்டு. பொதுவாகவே எதிர்பார்ப்புகள் அதிகம் கொண்டவர்கள் நீங்கள். எந்த விடயத்திலும் முதல் நிலையில் இருக்க வேண்டும் என்கின்ற ஆர்வமும், முயற்சியும் அதிகமாக உங்களிடம் அமைந்திருக்கும். அதற்குரிய பலன்கள் இந்த 2012ம் ஆண்டில் பூரணமாக உங்களுக்கு உண்டு. வெளிநாட்டு பிரயாணங்கள் எதிர்பார்க்கின்றவர்களுக்கு அப்பலன் நிறைவாக கிடைக்கும் நிலை உண்டு. உங்களுடைய முதலாம் எண் ஆதிபத்தியத்திலே வார எண் அமைவது, எதிர்பாராத வகையிலே திடீர் அதிஷ்டங்கள், நன்மைகள் ஏற்படுகின்ற பலன் உண்டு. சிறிய ஒரு துவாரம் இருந்தாலும் அதனூடாக



சூரிய வெளிச்சம் புகுந்து தனது வெளிச்ச ஒளிபரப்பி நிற்பது போலவே நீங்களும் எந்த ஒரு நிலையில் உங்களுக்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றதோ அதை சரியான முறையில் உங்களுக்கே பயன்படுத்திக் கொள்வீர்கள். எதை, எப்படி, எங்கே செய்யவேண்டும் என்கின்ற சூட்சும நிலை நன்கு தெரிந்தவர்கள். உங்களின் சுய இலாபத்திற்கே முதலிடம் தரும் குணம் உங்களுடையது. மற்றவர்களை முந்திச் செயற்படுவதிலே மிக ஆர்வமாக இருப்பீர்கள். அதே நேரம் சமூக அக்கறையும், சமூகப் பிரபல்யமும் உங்களிடம் அமைந்திருக்கும். எதையுமே மிகவும் சுலபமாக செய்து முடிக்கும் குணம், ஆற்றல் என்பன உங்களின் தனித்துவம். பிடிவாதம், முன்கோபம் இவைதான் உங்கள் வெற்றி இலக்குக்கு தடையாக இருப்பவை. எனவே இவற்றை உணர்ந்து நீங்கள் நன்கு செயற்பட்டால் இந்த 2012ம் ஆண்டை உங்களின் வெற்றி ஆண்டாக மாற்றிக் கொள்ள முடியும். சூரியன், சிவன் வழிபாடு மிகவும் நன்மை தரும். உங்களுக்கு அதிஷ்டம் தருகின்ற கல் மாணிக்கம், எனவே எல்லா வகையிலும்,

**இந்த 2012ம் ஆண்டிலே நீங்கள் நினைத்த விடயங்களை அடையக் கூடிய வாய்ப்புகள் நிறையவே உண்டு. அதற்கு ஏற்ப செயல் புரிந்து நல்வெற்றி பெறுக!**

**2 11 20 29**

திகதிகளில் பிறந்தவர்கள்

## இதயம் முழுவதும் சிந்தனை கொண்டு வாழுகின்ற இரண்டாம் என் அன்பர்களே

இந்த 2012ம் ஆண்டு 5ம் 7ம் 1ம் எண்களின் ஆதிபத்தியத்திலே அமைகின்றது. எனவே இந்த மூன்று எண்களின் ஆதிபத்தியமும், உங்களுக்கு அனுகூலமானதாகவே அமை கின்றது. எடுக்கின்ற முயற்சிகளில் ஓரள விற்கு அனுகூலமான பலா பலன்கள் அமையும் நிலை உண்டு. தொழில் நிலைகளில் முன்னேற்றகரமான பலன்கள் அமையும். இடையிடையே சிறு சிறு செலவீனங்கள் ஏற்பட்டு மறையும் பலனுண்டு. பணவரவு ஓரளவிற்கு தேவைகளுக்கு ஏற்ப அமைகின்ற பலன் இருக்கும். குடும்ப நிலையில் சிறப்பான அனுகூலம் ஏற்படும். கணவன் மனைவியிடையே நல்ல புரிந்துணர்வுகள் இருக்கும். பெண்களுக்கு சிறு சிறு மனச் சஞ்சலங்கள் ஏற்பட்டு மறையும். உறவினர்களின் மூலமாக சிறுசிறு பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிவரும். இந்த ஆண்டின் கூட்டு எண்ணாக உங்களின் வசிய எண் 7 அமைவது எதிர்பாராத வகையில் திடீர் அதிஷ்டங்கள் அமையும் நிலையுண்டு. உங்களின் தொழில் நிலைகளில் சிறுசிறு மாற்றங்கள் அல்லது தொழில் சார்ந்த பிரயாணங்கள் என்பன ஏற்படுகின்ற நிலை இருக்கும். கொடுக்கல், வாங்கல் விடயங்களில் மிகவும் நிதானமாக செயல்பட வேண்டும். கடன் நிலைகளிலும், அலைச்சல் இழுபறி நிலைகள் தொடரும். எனவே சற்று பொறுமை, நிதானமான செயற்பாடு உங்களுக்கு அனுகூலமான நிலையை தரும். மாணவர்கள் கல்வி நிலையில் சற்றுக் கவனம் எடுக்க வேண்டும். வார எண் 1ம் எண்ணாக அமைவது எதிர்பாராத வகையில் தேவையற்ற வீண் பிரச்சனைகளை கொடுக்கும். எந்த விடயம் என்றாலும் ஒன்றுக்கு பலமுறை யோசிக்கும் நீங்கள் யாரையும், எளிதிலே நம்பமாட்டீர்கள். நடக்காத விடயங்களையெல்லாம் நடப்பது போல் கற்பனை செய்வதில் உங்களுக்கு நிகர் யாருமில்லை. மற்றவர்களின் வளர்ச்சியை எளிதிலே தாங்கிக் கொள்ள மாட்டீர்கள். எதற்கும், ஏதாவது ஒரு பதில் வைத்திருப்பீர்கள். பார்த்தால் பசுபோல



பவ்வியமாக இருந்து பல விடயங்களையும் சாதித்து விடுவீர்கள். சந்திரன், அம்பாள் வழிபாடு அனுகூலமான பலன் தரும். உங்களின் அதிஷ்டகரமான கல் முத்து.

**இந்த 2012ம் ஆண்டு உங்களுக்கு ஓரளவிற்கு சிறப்புகள் தரும். பொறுமை நிதானத்தோடு செயற்பட்டு வெற்றிகள் காண்க!**

**3 12 21 30**

திகதிகளில் பிறந்தவர்கள்

## முயற்சி எனும் நிலையை மூல மந்திரமாக கொண்ட மூன்றாம் என் அன்பர்களே

உங்களின் எண்ணிற்கு இந்த 2012ம் ஆண்டிலே ஓரளவிற்கு அனுகூலமான வெற்றிகள் அமையக் கூடிய பலன்கள் உண்டு. இருப்பினும் நற்பலன்கள் அமைய சற்றுக் கூடுதலான முயற்சி எடுக்க வேண்டும். தொழில் நிலைகளில் அலைச்சல், இழுபறி நிலைகள் இருக்கும். குடும்ப நிலையில் தேவையற்ற பிரச்சனைகள் ஏற்பட்டு மறையும். எந்த விடயம் என்றாலும் நிதானத்துடன் செயற்படுவது மிகவும் நல்லது. ஆண்டு எண் 5ம் எண்ணில் அமைவதனால் இடையிடையே சிறு சிறு நன்மைகள் அமையும். கூட்டு எண் 7, வார எண் 1 என அமைவது, எல்லா விடயங்களிலும் சற்று போராட்ட நிலை அமையும். உங்களின் உறவினர்களுடன் சிறுசிறு மனச் சஞ்சலங்கள் ஏற்படும் நிலை இருக்கும். உடல் நிலைகளில் சுகயீனம், மருத்துவ செலவு என்பன அமையும். வெளிநாட்டு பிரயாணயங்களை எதிர்பார்க்கின்றவர்களுக்கு சற்றுக் கூடுதலான முயற்சி எடுக்க வேண்டிய நிலைகள் இருக்கும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலைப்பாடு உண்டு. இருப்பினும், கொடுக்கல், வாங்கல் மற்றும் கடன்

12ம் பக்கம் பார்க்க




# சிறகொடிந்த வண்ணத்துப்பூச்சிகள்

வவுனியூர் இரா.உதயணன்

**அந்தச் சிறிய வயதில் பிரவீனால் உணராத, உணர முடியாத வேறுபடுத்த முடியாத ஒருவித பாசம் அவள் மீது அவனுக்கு ஆட்கொண்டது. மற்ற மாணவர்கள் அவளைப் பார்த்து அல்லது அவளுடன் பேசினாலோ அவனுக்கு பொறாமையாகவும் அதை ஏற்க முடியாததாகவும் இருந்தது.**

இரவின் ஆதிக்கம் படர்ந்திருக்க விண்மீன்கள் அங்கும் இங்குமாக கண்சிமிட்டின.

பிரவீன் சின்னக்கா போட்டு வந்த தேனீரை குடித்து விட்டு, அறையின் ஒரு ஓரத்தில் படுத்துக் கொண்டான்.

இரண்டு சிறு அறைகளைக் கொண்ட அந்தச் சிறிய வீட்டின் முன் விறாந்தையில் சின்னக்கா வளர்த்த நாய் "ரோய்" படுத்திருந்தது.

கதவுகளற்றயன்னலினூடாகவானத்தைப் பார்த்தான் பிரவீன். எங்கும் கும்மிருட்டு. விண்மீன்கள் அங்கும் இங்குமாக கண்களைச் சிமிட்டிக் கொண்டிருந்தன.

சின்னக்கா கட்டியிருந்த அதே வளவிற்குள்தான் பிரவீன், சின்னக்கா, பெரியக்கா எல்லோரும் வாழ்ந்த வீடும் அமைந்திருந்தது. ஆனால் அந்த வீடு உருக்குலைந்து ஒரு சில சுவர்கள் மாத்திரம் மீதியாகவிருப்பதை வானை விட்டு இறங்கும்போதே பிரவீன் அவதானித்து விட்டான். ஆனால் உடனடியாக அதுபற்றி சின்னக்காவிடம் கேட்க அவன் விரும்பவில்லை.

உருக்குலைந்து போன, தான் வாழ்ந்த வீட்டைப் போன்று எத்தனையோ குடும்பங்களின் வாழ்க்கை கூட உருக்குலைந்து எத்தனையோ அனாதைப் பிள்ளைகள், எத்தனையோ விதவைகள், கால்களை இழந்து, கைகளை இழந்து ஊனமாகிப் போனவர்கள், பைத்தியம் பிடித்து உறவுகளின் பெயரைச் சொல்லிக் கொண்டு அலைபவர்கள்... நினைத்துப் பார்க்கும்போது வெறுப்பாகவும், அவனால் அதை ஏற்றுக் கொள்ளக் கடினமாகவும் இருந்தது.

தான் வெளிநாட்டில் இருந்ததால் தான் அனுப்பிய பணத்தில் சின்னக்காவால் இப்படி ஒரு சிறிய வீட்டைக் கட்ட முடிந்தது. ஆனால் எத்தனையோ குடும்பங்கள் இன்னமும் ஒழுங்காக ஒரு வீடு இல்லாமல் நான்கு தகரங்களை வீட்டின் கூரையாகக் கொண்டு சாணியைக் கொண்டு மெழுகி பக்கச் சுவர்களையும் மண்சுவராகக் கொண்டு வாழ்வதைப் பார்க்கும்போது நடந்து முடிந்த சம்பவங்களால் இழந்து விட்டவைகள்தான் எத்தனை என்பதை நினைக்கும்போது அவனுக்கே அவன் மீது வெறுப்பாகவிருந்தது.

அமைதியான அந்த நேரத்தில் சின்னக்காவின் நாய் "ரோய்" உறுமும் சத்தம் கேட்டது.

பிரவீனும் புரண்டு புரண்டு படுத்தான். விழித்திருந்த விழிகளை திறந்திருந்த இமைகள் மூட மறுத்தன.

வசதியாக வாழ்ந்த எத்தனையோ குடும்பங்கள் இன்று இப்படி சிறு சிறு குடிசைகளில் அதுவும் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு உறவையாவது இழந்த குடும்பங்கள் அதிகமாகவிருக்க வாழ்க்கை என்ற போராட்டம் கூட அந்தக் குடும்பங்களுக்கு ஒரு போராகவே தென்பட்டது.

குண்டுகள், அழித்துவிட்ட கட்டிடங்களை விட குடும்பங்கள்தான் அதிகம்.

பிரவீன் மீண்டும் புரண்டு படுத்தான்.

"நீ போகேக்க இருந்த ஊரில்ல உன்ர ஊர். இப்ப எல்லாம் மாறிப்போச்சு" வானில் வரும்போது குமரன் சொன்ன அந்த வார்த்தைகள் மீண்டும் மீண்டும் செவிப்பறைகளை அதிர வைக்க, பிரவீன் படுக்கையில் எழுந்து அமர்ந்தான்.

அவனால் தூங்க முடியவில்லை. விடிவதற்கு இன்னமும் மூன்று மணி நேரம் இருந்தது. எல்லோரும் அயர்ந்து தூங்கும் அந்த நேரத்தில் அவனால் மாத்திரம் தூங்க முடியாமல் இருக்க இருபது வருடங்களுக்கு முன்பு அவன் படித்த அவன் வீட்டிற்கு அருகிலிருந்த பாடசாலை நினைவிற்கு வந்தது. ஐந்தாம் வகுப்பு வரை அவன் அந்தப் பாடசாலையிலேயே படித்தவன்.

எல்லாமாக ஏறக்குறைய நாற்பது பிள்ளைகள்தான் அந்தச் சிறிய பாடசாலையில் படித்து வந்தார்கள். ஆறு ஆசிரியர்கள் அந்தப் பாடசாலையில் படிப்பித்து வந்தார்கள். அந்தப் பாடசாலையும் அங்கு படித்த மாணவர்களும், ஆசிரியர்களும் கூட ஒரு சிறிய குடும்பமாகத் திகழ்ந்தார்கள்.

அவனுடன் ஐந்தாம் வகுப்பு வரை படித்த செந்தூரன், கௌசல்யா, மதுமிதா, பிரணவன் ஆகியோரின் நினைவுகள் அவன் மனதில் மீண்டும் அலைகளாக, நினைவலைகளாக உருவெடுக்க பிரவீன் தலையணையை தூக்கி மடியில் வைத்து கைகளை அதில் ஊன்றிய வண்ணம் வானத்தைப் பார்த்தான். ஒரு சில நட்சத்திரங்கள் கண்களைச் சிமிட்டி, 'பிரவீன் நீ இங்கு நடந்த இழப்புக்கள் பற்றி அறியாத, முழுமையாக அறியாத, நாட்டை விட்டு ஓடிப்போன கோழை' என்பதுபோல் மின்னி மின்னிச் சிரித்தன.

அவனுடன் ஐந்தாம் வகுப்பு வரை படித்தவர்களில் பலர் மாவீரர்களான செய்தி அவனுக்கு லண்டனில் இருக்கும்போதே தெரிய வந்தது. பிரவீனின் உற்ற நண்பர்களில் ஒருவரான செந்தூரனும் மாவீரர்களில் ஒருவன்.

ஆனால் அவனுடன் படித்த கௌசல்யாவுக்கு என்ன நடந்தது என்பது பற்றி எவருக்கும் தெரியவில்லை. இன்று அவளுக்கும் கூட பிரவீனின் வயது இருக்கும்.

பிரவீனின் ஞாபகங்கள் அவளை நோக்கி நகர்ந்தன.

"பாவம், அப்பவே கஷ்டப்பட்ட குடும்பம்", அவன் வாய் முணுமுணுத்துக் கொண்டது.

"இப்ப அவள் இருக்கிறாளோ இல்லையோ தெரியாது" - மனம் அலட்டிக் கொண்டது.

படிப்பில் முதலாம் வகுப்பில் இருந்தே திறமைசாலியாகவிருந்த கௌசல்யா மிகவும் சாந்தமானவள். அவளுக்கு கோபம் வந்ததை பிரவீன் ஒருநாளும் கண்டதில்லை. மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பான்மை கொண்டவள். எப்பொழுதும் துப்புரவாக இருக்க வேண்டும் என்று யோசிப்பவள்.

'எவ்வளவோ பேர் அந்தப் பாடசாலையில் என்னுடன் படித்திருக்க ஏன் கௌசல்யா மாத்திரம் மீண்டும் மீண்டும் எனக்கு நினைவிற்கு வர வேணும்?' - பிரவீன் நினைத்தவாறாக நாடியை ஊன்றியிருந்த கைகளை எடுத்து சோம்பல் முறித்துக் கொண்டான்.

பிளேனில் பதினொரு மணித்தியாலங்கள், பின்பு வானில் பத்து மணித்தியாலங்கள், எல்லாமாக இருபத்தியொரு மணித்தியாலங்கள் பிரயாணத்திலேயே செலவழிந்து விட, அவன் உடம்பும் களைப்பால் புண்ணாக வலித்தது.

கௌசல்யாவை பெரிய அழகி என்று சொல்ல முடியாது. ஆனால் அவளிடம் ஏதோ ஒருவித ஈர்ப்பு இருந்தது. அவள் அந்தச் சிறுவயதிலேயே பழகும் விதம் பல மாணவர்களைக் கவர்ந்திருந்தது.

பலமுறை பிரவீன் பாடசாலைக்குப் போகாத நாட்களில் பாடசாலையில் ஆசிரியர்கள் படிப்பிக்கும் போது எடுத்த 'நோட்ஸ்'ஐ திரும்பவும் எழுதி பிரவீனுக்கு கொடுத்திருக்கிறாள் கௌசல்யா.

பிரவீனுக்கும் அவளது அச்சான எழுத்துக்களும், தான் வராத நாட்களில் அவள் 'நோட்ஸ்'ஐ எழுதித் தருவதும் அவனுக்கு நிறையவே பிடித்திருந்தது.

அந்தச் சிறிய வயதில் பிரவீனால் உணராத, உணர முடியாத, வேறுபடுத்த முடியாத ஒருவித பாசம் அவள் மீது அவனுக்கு ஆட்கொண்டது. மற்ற மாணவர்கள் அவளைப் பார்த்து அல்லது அவளுடன் பேசினாலோ அவனுக்கு பொறாமையாகவும் அதை ஏற்க முடியாததாகவும் இருந்தது.

பாடசாலை முடிந்து வீட்டிற்குப் போகும்போது அவன் அவள் பின்னால் நடந்து அவள் வீடு அடைந்த பின் தொடர்ந்து தன் வீட்டிற்குப் போவான். அவளும் திரும்பித் திரும்பி அவனைப் பார்த்துக் கொண்டு நடப்பாள்.

அவள் தனக்குச் சொந்தமானவள் போன்ற ஒருவித உணர்வு பிரவீனை ஆட்கொண்டிருந்தது.

ஐந்தாம் வகுப்பு வரை படித்து முடிந்ததும் பிரவீன் வித்தியானந்தா பாடசாலைக்கும், கௌசல்யா நெடுங்கேணிப் பாடசாலைக்கும் போகத் தொடங்கினார்கள்.

அதன்பின் இருவரும் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புக் குறைய இருவர் கவனமும் படிப்பிலேயே இருந்தது.

ஊரை விட்டுப் புறப்படுவதற்கு முதல்நாள் பிரவீன் கௌசல்யாவை தேடி அவள் வீட்டிற்குப் போயிருந்தான். ஏனோ அவன் மனதில் நாட்டை விட்டுப் போவதற்கு முன்பு அவளிடம் தான் போவதை சொல்ல வேண்டும் என்று தோன்றியிருக்க வேண்டும்.

பல வருடங்களின் பின் அவன், அவள் வீட்டிற்குப் போனபோது, அவள் மிகவும் மாறியிருந்தாள். சின்னக் கௌசல்யா பெரிய குமரியாக அரைப்பாவாடை தாவணியுடன் நின்றபோது அவனது கண்கள் உச்சம் தலையிலிருந்து உள்ளம்கால்வரை அவளைப் பார்த்து பிரமித்துப் போயின. அவள் மிகவும் அழகாக இருந்தாள்.

நீண்ட காலமாக ஊருக்குப் போகாமல், முல்லைத்தீவில் தங்கியிருந்து படித்ததால் கௌசல்யாவை பல காலம் பிரவீனால் சந்திக்க முடியவில்லை.

திடீரென நாட்டை விட்டுப் போவதற்கு முன்பு சந்தித்த அந்தச் சந்திப்பு பிரவீனுக்கு ஒரு வித சலனத்தை ஏற்படுத்தியிருந்தது.

சிறுவயதிலிருந்தே பெண்பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் தனி மதிப்புக் கொடுத்து வரும் பிரவீன், கௌசல்யாவைக் கண்டதும் மாத்திரம் ஏன் இப்படி புத்தி தடுமாற வேண்டும் என நினைத்தவனாய்,

"நான் இந்த நாட்டை விட்டு லண்டனுக்குப் போறேன், அதுதான் சொல்லிப் போட்டுப் போக வந்தனன்" என்று சொன்னபோது, கௌசல்யாவின் முகத்திலும் ஒரு மாறுதலை அவனால் அவதானிக்க முடிந்தது. ஆனால் கௌசல்யா அந்த மாறுதலை சுதாகரித்தவளாக மென்மையான சிரிப்புடன், "எப்ப திரும்பி வருவீர்கள்?" என்று கேட்டாள்.

"எனக்கே தெரியாது!" என்று பிரவீன் சொன்னவுடன், அவள் முகத்திலும் ஒரு இனம் தெரியாத சோகம் படர்ந்தது.

"இனி சந்திக்க வாய்ப்பு கிடைக்குமோ தெரியாது" என நினைத்த கௌசல்யா, "கடவுள் என்றும் உங்களுடன் இருப்பார்" என்று வாழ்த்தினாள். அப்படி வாழ்த்தும்போது வார்த்தைகள் தடுமாறின.

"தம்பி உனக்கு சுடுதண்ணி வைத்து இருக்கிறேன். போய் முகம் கழுவி குளித்து விட்டு வா" சின்னக்கா சொல்லிக் கொண்டு அவனது அறைக்குள் வந்தாள். அப்பொழுதுதான் பொழுது புலர்ந்து விட்டதை உணர்ந்த பிரவீன், "ஏன் எனக்கு சுடுதண்ணீ நான் இந்த நாட்டிலதான் பிறந்தனன், கிணற்றில் அள்ளிக் குளித்துவிட்டு வாறன்" என்று சொல்லிவிட்டு கிணற்றடி நோக்கி நடக்க, அங்க போயும் இவன் மாறேல்ல என்று சொல்லியபடி பிரவீனுக்கு தேனீர் போட அடுப்பங்கரைக்குச் சென்றாள் சின்னக்கா.


(தொடரும்)



# அரனருள்

பதிவு எண் - 504/04

எண் - 3/95, 2-ஆவது தெரு, ஸ்ரீ கிருஷ்ணநாதர், மதுரவாயில், சென்னை - 600 095.
Tel: 23782333, Cell : 9444156335, E-Mail : aranarul@yahoo.co.in



## ஒன்பதாம் ஆண்டு - திருமுறை இசை ஆராதனை விழா

### வேத சிவாகம புராண இதிகாச தோத்திர சாத்திர சைவ சமயக் கருத்தரங்கள்

**திருஞானசம்பந்தர் தேவாராம்**

மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம்பந்தன்வாய் நவிற்றிய தமிழ் மாலை
ஆதரித்து இசைகற்று வல்லார் சொலக் கேட்டுகந்தவர்தம்மை
வாதியா வினை மறுமைக்கும் இன்மைக்கும் வருத்தம் வந்தடையாவே.

சிவநேயக் செல்வர்காள்! சைவ சமயமே சமயம், சமயத்தின் மேல் சமயம் வேறில்லை என்பது ஆன்றோர் வாக்கு. சைவ சமயத்தின் முழுமுதற் பரம்பொருளாக விளங்கும் சிவபெருமானின் பொருள் சேர் பெரும் புகழினை சம்பந்தர், அப்பர், சுந்தரர் மணிவாசகர், திருமூலர், காரைக்கால் அம்மையார், சேக்கிழார் போன்ற இருபத்தேழு அருளார்களால் போற்றிப் பாடப்பெற்றவையே பன்னிரு திருமுறைகள். இவைகளைப் பண்ணிசையோடு பாடிப்போற்றுவதே சைவ சமய மரபாகும். தமிழிசையின் ஆதி இசையாகிய இப்பண்ணிசையை மக்கள் கேட்டு இன்புறவும், வருங்கால சந்ததியினர் இதனைப் போற்றிப் பாதுகாக்கும் பொருட்டும் "அரனருள்" ஒன்பதாம் ஆண்டு திருமுறை இசை ஆராதனை விழாவினை வரும் 12.3.2012 திங்கள் முதல் 23.3.2012 வெள்ளி முடிய பன்னிரு தினங்கள் காலை 8.30 மணி முதல் மாலை 7,30 மணி வரை சென்னை தமிழிசைச் சங்கம் இராஜா அண்ணாமலை மன்றத்தில் வெகு சிறப்பாக நடத்தவுள்ளது.

முதலாம் நாள் 12.3.2012 திங்கள் காலை 9.00 மணியளவில் திருக்கயிலாய ஸ்ரீ கந்த பரம்பரை சூரியனார் கோயில் சிவாக்கிர யோகிகள் ஆதீனம் 27-ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்க தேசிக பாமாசாரிய சுவாமிகள் அவர்கள் எழுந்தருளி திருமுறைக்கு அருந்தொண்டாற்றியவர்களுக்கு பட்டமும பொற்கிழியும் அளித்து விழாவினை துவக்கி வைத்து ஆசியுரை வழங்கியருளுவார்கள்.

இவ்விழாவில் தினமும் திருமுறை இசை அரங்கம், திருமுறைத் திருத்தல விளக்கம், வேத சிவாகம, புராண, இதிகாச, தோத்திர, சாத்திர, சைவசமயக் கருத்தரங்கம், தேவாரப் பண்ணிசைப் பயிற்சியும் விளக்கமும், திருவிளையாடல் புராணம் தொடர் விரிவுரை போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

நூற்றுக்கும் மேற்பட்ட திருமுறை இசைவாணர்கள், செந்தமிழ்ப் பேராசிரியர்க்ள, பக்கவாத்திய இசைக் கலைஞர்கள் கலந்து கொள்ளும் இவ்விழாவில் இவ்வாண்டு இலண்டன் விம்பிள்டன் ஸ்ரீ கணபதி ஆலய தேவாரப் பண்ணிசைப்பள்ளி அன்பர்கள் கலந்து கொண்டு திருமுறை இசை நிகழ்ச்சி வழங்கவுள்ளார்கள்.

பன்னிரு தினங்களும் மாலை 5 மணி முதல் 6 மணி வரை பேராசிரியை முனைவர் திருமதி. சரசுவதி இராமநாதன் அவர்களால் திருவிளையாடல் புராணம் தொடர் விரிவுரை நடைபெறும்.

அன்பர்கள் அனைவரும் பன்னிரு தினங்களும் இவ்விழாவில் கலந்து கொண்டு எல்லாம் வல்ல சிவ பரம்பொருளின் திருவருளைப்பெற அன்புடன் அழைக்கிறோம்.

**"பார் போற்றும் தேவாரம் இசைப்பாட்டின் ஆதாரம்"**

அனைவரும் வருக! அரனருள் பெருக!

இப்படிக்கு

**சாமி தண்டபாணி,**
ஸ்தாபகர் அரனருள்
ஓதுவா மூர்த்தி இலண்டன் சிவன் கோவில்

**S. சண்முகசுந்தரம்,** B.A.,
தலைவர் அரனருள்.




# A-Lanka Travel Ltd

171 Tooting High Street, Tooting,
London SW 17 0SZ
Phone : 020 8672 5551 (3 lines)
020 8672 2010
Mobile : 07956 206 709
E-mail : wimal@a-lankatravel.co.uk
Web : www.a-lankatravel.co.uk

**OFFER OF THE WEEK.**

**LONDON - COLOMBO RETURN**
**SRI LANKAN AIRLINES £210 + TAX**
**WITH 12,000**
**FLY SMILES HOLDERS ONLY**
**UNTIL 30TH NOV. 11**
*conditions apply

SriLankan Airlines

| | |
|---|---|
| Colombo | fr £300 + tax |
| Bangalore | fr £300 + tax |
| Kuala Lumpur | fr £270 + tax |
| Singapore | fr £270 + tax |
| Trivandrum | fr £300 + tax |

*terms & conditions apply



ETIHAD AIRWAYS

| | |
|---|---|
| Chennai | fr £225 + tax |
| Kochi | fr £155 + tax |
| Trivandrum | fr £225 + tax |
| Kuala Lumpur | fr £209 + tax |
| Singapore | fr £429 + tax |

*terms & conditions apply

Emirates

| | |
|---|---|
| Bangalore | fr £365 + tax |
| Chennai | fr £405 + tax |
| Kochi | fr £405 + tax |
| Kuala Lumpur | fr £455 + tax |
| Trivandrum | fr £405 + tax |

*terms & conditions apply

JET AIRWAYS

| | |
|---|---|
| Bangalore | fr £195 + tax |
| Chennai | fr £195 + tax |
| Kuala Lumpur | fr £359 + tax |
| Singapore | fr £379 + tax |
| Trivandrum | fr £245 + tax |

*terms & conditions apply

KUWAIT AIRWAYS

| | |
|---|---|
| Colombo | fr £225 + tax |
| Chennai | fr £225 + tax |
| Kochi | fr £225 + tax |
| Kuala Lumpur | fr £295 + tax |
| Trivandrum | fr £225 + tax |

*terms & conditions apply

OMAN AIR


| | |
|---|---|
| Bangalore | fr £189 + tax |
| Chennai | fr £205 + tax |
| Kochi | fr £225 + tax |
| Kuala Lumpur | fr £295 + tax |
| Trivandrum | fr £255 + tax |

*terms & conditions apply

QATAR AIRWAYS

| | |
|---|---|
| Bangalore | fr £175 + tax |
| Chennai | fr £295 + tax |
| Kochi | fr £295 + tax |
| Singapore | fr £415 + tax |
| Trivandrum | fr £295 + tax |

*terms & conditions apply



# WWW. PALANEEUNCLESCIENCEMATHSENGLISHLECTURER.COM

**Dr.D.V.Palanivell** FDSRCS(England), Fellow in Dental Surgery of the royal college of Surgeons of England, is very very concerened and grossly unhappy that only 25% of our children end up getting parents uneducation and bad sociology among reasons. I feel we should give broad lectures in all subjects to the innocent minds and in 15 minutes of 1 hour lecture summerise our strong points which is good for the retention.

## AGE 7-8-9-10, AGE 11-14, AGE 15-16-17 TO THESE CATEGORY 1 OFFER

Knowledge stroming lectures based on my 40 years research of how children want to learn. They want fun, no blame, no humiliation, no put down in front of peers and family.

I offer 3 hours 100% quality education based on my 40 years research to 3 groups, (1) Age 7,8,9 (2) Age 10,11,12,13(3)14-16

My first batch starts in Eastham/Manor Park, Saturdays 7pm-10pm make it easier for mum/dad bring the child. This is for age 7,8,9 groups and having debate, science competition, maths logic competition, science research presentation in front of judges from all walks of life, I will, plan and implement, will be fun and very educational with maximum retention of knowledge.

Group 2 will be in Lewisham and possibly royal Berkshire on Sundays for age 10-11-12-13-14

Fee will be £20(Twenty pounds) for all 3 hours lecture, weekly exam and correction and reporting. Also I will teach oratory skills, presentation at interviews by top company employers, and how to research for looking top firms and I will teach how to bring out the real knowledge to the recruiting panel.

**HOW TO APPLY:**

Fill up application form: Full name of child.............................................................................................. Date of birth:..............................

Couse venue..................................................Full address..................................................................................................................

Email..................................................Telephone.................................Write cheque £80 for first 4 lectures to: David V. Palanivell FDSRCS, and post it to: Varney House, 79 Meadfield Road, Langley, Berkshire, Postcode SL3 8HY, Courses start in feb 2012 and you will be contacted : **D.V.Palanivell** FDSRCS

# 16-02-2012 முதல் 29-02-2012 வரை நிகழ்ச்சி நிரல்

12வது ஆண்டு

தீபம்

உலகத் தமிழருக்கு ஒரு தொலைக்காட்சி

## வியாழன் 16-02-2012

6.30 புத்தம் புதுக்காலை
9.30 ராகதீபம்
10.00 செய்தி
10.05 அசத்தப்போவது யாரு?
10.30 இதய ராகம்
11.00 மதுரை
11.30 நம்மவர் கலை வண்ணம்
12.00 செய்திகள்
12.30 சினேகிதியே
13.00 திரை விருந்து
15.30 திரை மசாலா
16.00 செய்தி
16.05 இசை நிகழ்ச்சி
16.30 கதம்பம் - நேரடி நிகழ்ச்சி
17.30 வீட்டுக்கு வீடு லூட்டி
18.00 செய்தி
18.30 சஹானா - தொடட்
19.00 சிம்ரன் திரை
19.30 செல்லமே - தொடர்
20.00 பதிவுகள்
21.00 செய்தி
21.30 தினப்பலன்
21.40 நகைச்சுவை நேரம்
22.30 சஹானா - தொடர்
23.00 சிம்ரன் திரை

## வெள்ளி 17-02-2012

6.30 புத்தம் புதுக்காலை
9.30 அறிந்தும் அறியாததும்
10.00 செய்தி
10.05 ராகமாலிகா
10.30 சங்கீதக் காலை
11.00 சூப்பர் 10 பாடல்கள்
11.30 உங்கள் மனசுக்கு பிடிச்சது மட்டும் - சமையல்
12.00 செய்தி
12.30 அன்புள்ள சினேகிதியே
13.00 திரை விருந்து
15.30 ராக மாலிகா
16.00 செய்தி
16.05 நகைச்சுவை நேரம்
16.30 கதம்பம்-நேரடி நிகழ்ச்சி
17.30 வீட்டுக்கு வீடு லூட்டி
18.00 செய்தி
18.30 சஹானா-தொடர்
19.00 சிம்ரன் திரை
19.30 செல்லமே- தொடர்
20.00 சதுரங்கம்-நேரடி நிகழ்ச்சி
21.00 செய்தி
21.30 தினப் பலன்
21.40 ஹரியுடன் நான்
22.30 சஹானா- தொடர்
23.00 சிம்ரன் திரை

## சனி 18-02-2012

7.00 ஒரு படப்பாடல்
7.30 ஒளி பரவட்டும்
7.45 இந்த நாள் இனிய நாள்
8.00 தினப்பலன்
8.10 இசைத் தென்றல்
8.30 பிள்ளைத் தமிழ்
8.45 நகைச்சுவைநேரம்
9.15 குட்டீஸ் கிளப்-நேரடி-நிகழ்ச்சி
10.30 செல்லமே-மறு ஒளிபரப்பு
12.00 செய்தி
12.10 நகைச் சுவை நேரம்
12.30 குருவும் நானும்
13.30 திரை விருந்து
14.00 செய்தி
14.05 திரை விருந்து
16.00 செய்தி
16.05 நகைச்சுவை நேரம்
16.30 இதய சங்கமம்
17.00 ரொப் 10 மூவிஸ்
17.30 அதிஷ்ட சக்கரம் -நேரடி நிகழ்ச்சி
18.30 அசத்தப்போவது யாரு?
19.30 செய்தி
20.00 திரை விருந்து
23.00 ஒளிபரப்பு முடிவு

## ஞாயிறு 19-02-2012

7.00 ஒரு படப்பாடல்
7.30 ஒளி பரவட்டும்
7.45 இந்த நாள் இனிய நாள்
8.00 கவிச்சோலை
8.30 ஆங்கிலம் கற்போம்
8.45 ராசிபலன்
9.30 இன்றைய உலகம்
10.00 ஆலோசனை நேரம் - நேரடி நிகழ்ச்சி
11.00 நம்மவர் கலைவண்ணம்
11.30 சுவையான சமையல்
12.00 செய்திகள்
12.05 சிந்திக்க... சேமிக்க... - நேரடி நிகழ்ச்சி
13.30 திரை விருந்து
14.00 செய்தி
14.05 திரை விருந்து
16.00 செய்தி
16.05 திரை மசாலா
16.30 தகதிமிதா
17.00 இசை நிகழ்ச்சி
17.30 ராகமாலிகா
18.30 பிடிக்கலே... பிடிக்கலே
19.00 கடல் கோடை
19.30 செய்தி
20.00 திரை விருந்து
22.30 பிடிக்கலே... பிடிக்கலே
23.00 ஒளிபரப்ப முடிவு

## திங்கள் 20-02-2012

06.30 புத்தம் புதுக் காலை
09.30 அறிந்தும் அறியாததும்
10.00 செய்தி
10.05 குருவும் நானும்
10.30 தேன் அமுது
11.00 மதுரை
11.30 உங்கள் மனசுக்குப் பிடிச்சது மட்டும் - சமையல்
12.00 செய்தி
12.30 அன்புள்ள சினேகிதியே!
13.00 திரை விருந்து
15.30 நகைச்சுவை நேரம்
16.00 செய்தி
16.05 இசை நிகழ்ச்சி
16.30 கதம்பம் - நேரடி நிகழ்ச்சி
17.30 வீட்டுக்கு வீடு லூட்டி
18.00 செய்தி
18.30 சஹாணா - தொடர்
19.00 சிம்ரன் திரை
19.30 செல்லமே - தொடர்
20.00 இனியும் இப்படித்தான்
21.00 செய்தி
21.30 தினப்பலன்
21.40 கொமடி கொலனி
22.30 சஹானா
23.00 சிம்ரன் திரை

## செவ்வாய் 21-02-2012

6.30 புத்தம் புதுக்காலை
9.30 ராகதீபம்
10.00 செய்தி
10.05 ஹரியுடன் நான்
10.30 திரை மசாலா
11.00 மதுரை
11.30 இன்றைய உலகம்
12.00 செய்தி
12.30 சினேகிதியே
13.00 திரை விருந்து
15.30 திரை மசாலா
16.00 செய்தி
16.05 நகைச்சுவை நேரம்
16.30 கதம்பம் - நேரடி நிகழ்ச்சி
17.30 வீட்டுக்கு வீடு லூட்டி
18.00 செய்தி
18.30 சஹானா - தொடர்
19.00 கெட்டிமேளம் - தொடர்
19.30 சிம்ரன் திரை
20.00 கேள்வி நேரம் - நேரடி நிகழ்ச்சி
21.00 செய்தி
21.30 தினப்பலன்
21.40 நகைச்சுவை நேரம்
22.30 சஹானா - தொடர்
23.00 சிம்ரன் திரை

## புதன் 22-02-2012

6.30 புத்தம் புதுக்காலை
9.30 அறிந்தும் அறியாததும்
10.00 செய்தி
10.05 அசத்தப்போவது யாரு?
10.30 பழமை தந்த இனிமை
11.00 மதுரை
11.30 உங்கள் மனசுக்கு பிடிச்சது மட்டும் - சமையல்
12.00 செய்தி
12.30 அன்புள்ள சினேகிதியே
13.00 திரை விருந்து
15.30 திரை மசாலா
16.00 செய்தி
16.05 நகைச்சுவை நேரம்
16.30 கதம்பம்
17.30 வீட்டுக்கு வீடு லூட்டி
18.00 செய்தி
18.30 சஹானா - தொடர்
19.00 சிம்ரன் திரை
19.30 செல்லமே - தொடர்
20.00 திண்ணையில் நயினார்
20.30 பிடிக்கல....பிடிக்கல
21.00 செய்தி
21.30 தினப்பலன்
21.40 கொமடி கொலனி
22.30 சஹானா - தொடர்
23.00 சிம்ரன் திரை

## வியாழன் 23-02-2012

6.30 புத்தம் புதுக்காலை
9.30 ராகதீபம்
10.00 செய்தி
10.05 அசத்தப்போவது யாரு?
10.30 இதய ராகம்
11.00 மதுரை
11.30 நம்மவர் கலை வண்ணம்
12.00 செய்திகள்
12.30 சினேகிதியே
13.00 திரை விருந்து
15.30 திரை மசாலா
16.00 செய்தி
16.05 இசை நிகழ்ச்சி
16.30 கதம்பம் - நேரடி நிகழ்ச்சி
17.30 வீட்டுக்கு வீடு லூட்டி
18.00 செய்தி
18.30 சஹானா - தொடட்
19.00 சிம்ரன் திரை
19.30 செல்லமே - தொடர்
20.00 பதிவுகள்
21.00 செய்தி
21.30 தினப்பலன்
21.40 நகைச்சுவை நேரம்
22.30 சஹானா - தொடர்
23.00 சிம்ரன் திரை

## தீபம் செய்தி நேரங்கள்

திங்கள் முதல் வெள்ளி வரை

| | |
|---|---|
| காலை | 7.00,10.00 மணி |
| நண்பகல் | 12.00 மணி |
| பிற்பகல் | 2.00 மணி |
| மாலை | 16.00, 18.00 மணி பிரதான செய்திகள் |
| இரவு | 21.00 மணி பிரதான செய்திகள் |

வார இறுதி நாட்கள் சனி, ஞாயிறு

| | |
|---|---|
| நண்பகல் | 12.00 மணி |
| மாலை | 16.00 மணி |
| இரவு | 19.30 மணி பிரதான செய்திகள் |

மற்றொரு வெகுமதியான
தீபம் டிவியின் புதிய சலுகை
தீபம் பார்க்க ஒரு வருடத்துக்கு புதிய சந்தா இப்போது
£75 மட்டுமே!
புதுப்பிக்க
£60 மட்டுமே!
தீபம் நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழ...
020 8814 6565

## வெள்ளி 24-02-2012

6.30 புத்தம் புதுக்காலை
9.30 அறிந்தும் அறியாததும்
10.00 செய்தி
10.05 ராகமாலிகா
10.30 சங்கீதக் காலை
11.00 சூப்பர் 10 பாடல்கள்
11.30 உங்கள் மனசுக்கு பிடிச்சது மட்டும் - சமையல்
12.00 செய்தி
12.30 அன்புள்ள சினேகிதியே
13.00 திரை விருந்து
15.30 ராக மாலிகா
16.00 செய்தி
16.05 நகைச்சுவை நேரம்
16.30 கதம்பம்-நேரடி நிகழ்ச்சி
17.30 வீட்டுக்கு வீடு லூட்டி
18.00 செய்தி
18.30 சஹானா-தொடர்
19.00 சிம்ரன் திரை
19.30 செல்லமே- தொடர்
20.00 சதுரங்கம்-நேரடி நிகழ்ச்சி
21.00 செய்தி
21.30 தினப் பலன்
21.40 ஹரியுடன் நான்
22.30 சஹானா- தொடர்
23.00 சிம்ரன் திரை

## சனி 25-02-2012

7.00 ஒரு படப்பாடல்
7.30 ஒளி பரவட்டும்
7.45 இந்த நாள் இனிய நாள்
8.00 தினப்பலன்
8.10 இசைத் தென்றல்
8.30 பிள்ளைத் தமிழ்
8.45 நகைச்சுவைநேரம்
9.15 குட்டீஸ் கிளப்-நேரடி-நிகழ்ச்சி
10.30 செல்லமே-மறு ஒளிபரப்பு
12.00 செய்தி
12.10 நகைச் சுவை நேரம்
12.30 குருவும் நானும்
13.30 திரை விருந்து
14.00 செய்தி
14.05 திரை விருந்து
16.00 செய்தி
16.05 நகைச்சுவை நேரம்
16.30 இதய சங்கமம்
17.00 ரொப் 10 மூவிஸ்
17.30 அதிஷ்ட சக்கரம் -நேரடி நிகழ்ச்சி
18.30 அசத்தப்போவது யாரு?
19.30 செய்தி
20.00 திரை விருந்து
23.00 ஒளிபரப்பு முடிவு

## ஞாயிறு 26-02-2012

7.00 ஒரு படப்பாடல்
7.30 ஒளி பரவட்டும்
7.45 இந்த நாள் இனிய நாள்
8.00 கவிச்சோலை
8.30 ஆங்கிலம் கற்போம்
8.45 ராசிபலன்
9.30 இன்றைய உலகம்
10.00 ஆலோசனை நேரம் - நேரடி நிகழ்ச்சி
11.00 நம்மவர் கலைவண்ணம்
11.30 சுவையான சமையல்.
12.00 செய்திகள்
12.05 சிந்திக்க... சேமிக்க... - நேரடி நிகழ்ச்சி
13.30 திரை விருந்து
14.00 செய்தி
14.05 திரை விருந்து
16.00 செய்தி
16.05 திரை மசாலா
16.30 தகதிமிதா
17.00 இசை நிகழ்ச்சி
17.30 ராகமாலிகா
18.30 பிடிக்கலே... பிடிக்கலே
19.00 கடல் கோடை
19.30 செய்தி
20.00 திரை விருந்து
22.30 பிடிக்கலே... பிடிக்கலே
23.00 ஒளிபரப்ப முடிவு

## செவ்வாய் 27-02-2012

6.30 புத்தம் புதுக்காலை
9.30 ராகதீபம்
10.00 செய்தி
10.05 ஹரியுடன் நான்
10.30 திரை மசாலா
11.00 மதுரை
11.30 இன்றைய உலகம்
12.00 செய்தி
12.30 சினேகிதியே
13.00 திரை விருந்து
15.30 திரை மசாலா
16.00 செய்தி
16.05 நகைச்சுவை நேரம்
16.30 கதம்பம் - நேரடி நிகழ்ச்சி
17.30 வீட்டுக்கு வீடு லூட்டி
18.00 செய்தி
18.30 சஹானா - தொடர்
19.00 சிம்ரன் திரை
19.30 செல்லமே - தொடர்
20.00 கேள்வி நேரம் - நேரடி நிகழ்ச
21.00 செய்தி
21.30 தினப்பலன்
21.40 நகைச்சுவை நேரம்
22.30 சஹானா - தொடர்
23.00 சிம்ரன் திரை

## புதன் 28-02-2012

6.30 புத்தம் புதுக்காலை
9.30 அறிந்தும் அறியாததும்
10.00 செய்தி
10.05 அசத்தப்போவது யாரு?
10.30 பழமை தந்த இனிமை
11.00 மதுரை
11.30 உங்கள் மனசுக்கு பிடிச்சது மட்டும் - சமையல்
12.00 செய்தி
12.30 அன்புள்ள சினேகிதியே
13.00 திரை விருந்து
15.30 திரை மசாலா
16.00 செய்தி
16.05 நகைச்சுவை நேரம்
16.30 கதம்பம்
17.30 வீட்டுக்கு வீடு லூட்டி
18.00 செய்தி
18.30 சஹானா - தொடர்
19.00 சிம்ரன் திரை
19.30 செல்லமே - தொடர்
20.00 திண்ணையில் நயினார்
20.30 பிடிக்கல....பிடிக்கல
21.00 செய்தி
21.30 தினப்பலன்
21.40 கொமடி கொலனி
22.30 சஹானா - தொடர்
23.00 சிம்ரன் திரை

## வியாழன் 29-02-2012

6.30 புத்தம் புதுக்காலை
9.30 ராகதீபம்
10.00 செய்தி
10.05 அசத்தப்போவது யாரு?
10.30 இதய ராகம்
11.00 மதுரை
11.30 நம்மவர் கலை வண்ணம்
12.00 செய்திகள்
12.30 சினேகிதியே
13.00 திரை விருந்து
15.30 திரை மசாலா
16.00 செய்தி
16.05 இசை நிகழ்ச்சி
16.30 கதம்பம் - நேரடி நிகழ்ச்சி
17.30 வீட்டுக்கு வீடு லூட்டி
18.00 செய்தி
18.30 சஹானா - தொடட்
19.00 சிம்ரன் திரை
19.30 செல்லமே - தொடர்
20.00 பதிவுகள்
21.00 செய்தி
21.30 தினப்பலன்
21.40 நகைச்சுவை நேரம்
22.30 சஹானா - தொடர்
23.00 சிம்ரன் திரை

# ஜெ



## அம்மு முதல் அம்மா வரை

ஜெ.ராம்கி

7

'அடிமைப்பெண்'. இரண்டு வருஷங்களுக்கு முன்பே பூஜை போட்டு பாதியிலேயே நின்றிருந்த படத்தைத்தான் எம்.ஜி.ஆர். தூசி தட்டினார். ஆரம்பத்தில் சரோஜாதேவி, கே.ஆர்.விஜயாவோடு ஜெயலலிதாவும் நடிப்பதாக இருந்தது. இப்போது அடிமைப் பெண்ணில் ஜெயலலிதா தவிர, வேறு யாருமில்லை. ஜீவா, பவளவல்லி என ஜெயலலிதாவுக்கு இரட்டை வேடங்கள்.

ஜெயலலிதாவின் வளர்ச்சியிலும், பாதுகாப்பிலும் எம்.ஜி.ஆர். மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். 'அடிமைப்பெண்' படத்தில் இயக்குநருக்கு இணையான அந்தஸ்து ஜெயலலிதாவுக்கும் கிடைத்தது. படத்தில் ஜெயலலிதாவுக்குச் சொந்தக்குரலில் ஒரு பாட்டும் உண்டு. 'அம்மா என்றால் அன்பு, அப்பா என்றால் அறிவு!' பாட்டு பதிவாகும்போது, பக்கத்திலேயே இருந்து எம்.ஜி.ஆர். ஊக்கப்படுத்தினார்.

சர்ச் பார்க்கில் படிக்கும் காலங்களில் அசெம்பிளி ஹாலில் கையில் கிதாருடன் கோரஸ் பாடுவது ஜெயலலிதாவுக்குப் பிடித்தமான விஷயம். சொந்தக்குரலில் சினிமாவில் பாடவேண்டும் என்ற ஜெயலலிதாவின் நீண்ட நாள் ஆசை, எம்.ஜி.ஆர். மூலமாகத்தான் நிறைவேறியது.

*1969*, ராஜஸ்தானில் தண்ணீர் கிடைக்காத பாலைவனத்தில் முதல் கட்டப்படப்பிடிப்பு, ஜெயலலிதாவுக்கு எந்தக் கஷ்டமும் இல்லாமல் பார்த்துக் கொண்டார்கள். அடுத்த கட்ட படப்பிடிப்பு ஒகேனக்கலில் தொடர்ந்தது. ஜெயலலிதாவும் சந்தியாவும் சென்னையிலிருந்து ஒகேனக்கலுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். கடைசி நேரத்தில் எல்லோரும் சேர்ந்து போகலாம் என்று அவர்களை ராமாவரம் தோட்டத்துக்கு எம்.ஜி.ஆர். வரச் சொல்லிவிட்டார்.

முன்னால் எம்.ஜி.ஆரின் கார், அதைத் தொடர்ந்து ஜெயலலிதா கார் ஒகேனக்கலை நோக்கி போய்க்கொண்டிருந்தது. கிருஷ்ணகிரி தாண்டுவதற்கே நள்ளிரவு ஆகிவிட்டது. எம்.ஜி.ஆரின் கார் ஆமை வேகத்தில் முன்னால் போய்க்கொண்டிருந்தது. இதேவேகத்தில் போனால் பொழுது விடியும்போதுதான், ஒகேனக்கல போய்ச் சேரமுடியும். பொறுமையிழந்த ஜெயலலிதா, தனது டிரைவரிடம் சொல்லி எம்.ஜி.ஆரின் காரை ஓவர்டேக் செய்து முன்னால் போகச் சொல்லிவிட்டார். 'ராத்திரி நேரத்தில் வேகவேகமாக காரில் போனால் அம்முவுக்கு என்னாவது?' என்ற எம்.ஜி.ஆரின் கவலை அடுத்த நாள் காலையில்தான் ஜெயலலிதாவுக்குத் தெரிய வந்தது.

இன்னொரு முறை ஏற்காட்டில் என்.டி.ஆருடன் ஒரு தெலுங்குப் படத்துக்கான படப்பிடிப்பு. அதை முடித்துவிட்டு அடிமைப் பெண்ணுக்காக ஜெயலலிதா சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். கடுமையான மழையால் உளுந்தூர்பேட்டை - விழுப்புரம் பாலம் உடைந்து ஏகப்பட்ட போக்குவரத்து நெருக்கடி. ஜெயலலிதாவை அழைத்து வர சென்னையிலிருந்து ஒரு காரை எம்.ஜி.ஆர். அனுப்பி வைத்தார். இருந்தும் ஜெயலலிதாவால் பாலத்தைக் கடக்க முடியவில்லை. சேலத்துக்குத் திரும்பிப் போய் ரயில் பிடித்து சென்னைக்கு வந்து சேர்ந்த பின்னர்தான் எம்.ஜி.ஆருக்கு நிம்மதி வந்தது.

'கண்ணன் என் காதலன்' படப்பிடிப்பு நடந்தபோது, இடைவேளையில் மதிய உணவுக்காக காரில் ஏறிவிட்ட எம்.ஜி.ஆர்., அடுத்த காட்சியைப் பற்றி இயக்குநரிடம் கேட்டார். மாடிப்படியில் சக்கர நாற்காலியிலிருந்து ஜெயலலிதா உருண்டு விழும் காட்சியைப் படமாக்கப்போவதாகச் சொன்னார்கள். ஆபத்தான விஷயமாச்சே என்று பதறிப்போய் காரைவிட்டு இறங்கிய எம்.ஜி.ஆர்., திரும்பவும் செட்டுக்குள் வந்து சக்கர நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, பின்னால் கயிற்றைச் சரியாகக் கட்டச் சொல்லி ஏகப்பட்ட முறை ஒத்திகை பார்த்த பின்னரே ஜெயலலிதாவை நடிக்க அனுமதித்தார்.

மற்ற நடிகைகளை விட ஜெயலலிதா மேல் எம்.ஜி.ஆருக்கு எப்போதும் கூடுதல் பாசம் இருந்தது. அதை ஜெயலலிதாவும் உணர்ந்தே இருந்தார். அதேசமயம் எம்.ஜி.ஆர். காட்டிய அதீத அக்கறை எரிச்சலூட்டியது. அப்போது தி.மு.க. ஆட்சியிலிருந்த நேரம். *1969-ம்* ஆண்டின் சிறந்த படமாக அடிமைப் பெண் தேர்வு செய்யப்பட்டது. அடிமைப் பெண்ணின் வெற்றியில் ஜெயலலிதாவுக்குக் கணிசமான பங்கு உண்டு. தெலுங்கு, கன்னடப்படங்களில் நடிப்பதையும் ஜெயலலிதா குறைத்துக் கொண்டார். தமிழில் நடிப்பதற்கே நேரமில்லை. ஜெயலலிதாவின் தேதிக்காக எம்.ஜி.ஆரும், சிவாஜியும் காத்திருக்க வேண்டி இருந்தது.

எப்போதும் இல்லாத அளவுக்கு ஜெயலலிதா, சினிமா மீது ஈடுபாடு காட்ட ஆரம்பித்தார். 'குமரிப்பெண்' படத்துக்காக சைக்கிள் ஓட்டிய ஜெயலலிதா, 'தெய்வமகன்' படத்துக்காக கார் ஓட்டக் கற்றுக் கொண்டார். அடிமைப் பெண்ணுக்குப் பதிலாக தெய்வமகன் ஆஸ்காருக்குப் போனதில் எம்.ஜி.ஆருக்கு வருத்தம். இரண்டில் எந்தப்படம் ஆஸ்காருக்குப் போனாலும் ஜெயலலிதாவுக்குப் பெருமைதான். இரண்டிலும் நடித்தவர் அவர்தானே!



"எத்தனையோ நடிகைகளுடன் எம்.ஜி.ஆர் நெருக்கமான நட்புடன் இருந்திருக்கிறார் பாசத்தோடு பலரை வீட்டிற்கு அழைத்து வந்து சாப்பிட வைத்திருக்கிறார். அதை எல்லாம் எம்.ஜி.ஆர். மனைவி ஜானகி கண்டு கொண்டதே இல்லை. அவர்களில் பலர் ஜானகியை அக்கா என்று அழைப்பார்கள். ஒரு சினிமா நடிகையாக இருந்ததால் ஜானகிக்கும் சினிமா உலகம் புரிந்தது. ஆனால் ஜெயலலிதா மீது ஜானகிக்கு ஏனோ இனம் புரியாத வெறுப்பு இருக்கத்தான் செய்தது.

எம்.ஜி.ஆரின் நெருங்கிய வட்டாரத்தில் ஜெயலலிதாவின் செல்வாக்கு மளமளவென்று உயர்ந்தது. அவர் நடிக்கும் படங்களின் திரைக்கதை, வசனங்கள் ஜெயலலிதாவின் பார்வைக்கும் வந்தன. அவரது குடும்பத்துடனான தனிப்பட்ட நட்பும் வளர்ந்தது. சிவாஜியின் படமான 'குருதட்சணை' படப்பிடிப்பின் மதிய இடைவேளையில் எம்.ஜி.ஆர். - ஜானகியுடன் சாப்பிட ஜெயலலிதா, ராமாவரம் தோட்டத்துக்குச் சென்றிருக்கிறார்.

எத்தனையோ நடிகைகளுடன் எம்.ஜி.ஆர். நெருக்கமான நட்புடன் இருந்திருக்கிறார். பாசத்தோடு பலரை வீட்டிற்கு அழைத்து வந்து சாப்பிட வைத்திருக்கிறார். அதையெல்லாம் ஜானகி கண்டுகொண்டதேயில்லை. அவர்களில் பலர் ஜானகியை அக்கா என்றெல்லாம் அழைப்பார்கள். ஒரு சினிமா நடிகையாக இருந்ததால் ஜானகிக்கு சினிமாவுலகம் புரிந்தது. ஆனாலும் ஜெயலலிதா மீது ஜானகிக்கு ஏனோ இனம் புரியாத வெறுப்பு இருக்கத்தான் செய்தது.

ஜெயலலிதாவுக்கு காமெடியும் வரும் என்பதை 'எங்க மாமா' நிரூபித்தது. பாலாஜியின் தயாரிப்பில் வந்த 'எங்கிருந்தோ வந்தாள்' மொழிமாற்றப் படமாக இருந்தாலும் ஜெயலலிதாவின் நடிப்புக்காகப் பேசப்பட்டது. அப்போது முதல் பாலாஜி படமென்றால் ஜெயலலிதாவுக்கு எப்போதும் தனி மரியாதை உண்டு. ஜெயலலிதா செட்டில் பயன்படுத்திய எவர்சில்வர் டம்ளர், மடக்கு நாற்காலி இப்போதும் பாலாஜி யூனிட்டில் பத்திரமாக இருக்கிறது.

என்னதான் எம்.ஜி.ஆருடன் ஜோடி சேர்ந்த படங்கள் ஜெயலலிதாவை பிரபலப்படுத்தினாலும் அவரை நடிகையாக அங்கீகரித்தது சிவாஜியுடன் நடித்த படங்கள்தான். முக்கியமாக நிறைய களோஸப் காட்சிகளில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. தமிழ் சினிமாவில் அப்போது திமிர் பிடித்த பெண் கேரக்டருக்கு ஜெயலலிதாவைத்தான் ஒப்பந்தம் செய்வார்கள். முதல் பாதியில் மாடர்ன் டிரெஸ்ஸில் வந்து ஹீரோவை அவமானப்படுத்தி, பிற்பாதியில் புடவை கட்டிக் கொண்டு அடக்க ஒடுக்கமாக வசனம் பேசவேண்டும். கிட்டத்தட்ட இரண்டு டஜன் படங்களில் ஜெயலலிதாவின் கேரக்டர் இந்த ரகம்தான்.

'சவாலே சமாளி' படமும் அந்த ரகம்தான். திமிர் பிடித்த பணக்காரப் பெண், ஏழை ஹீரோவை மணந்துகொண்டு குடிசையில் குடும்பம் நடத்துவதாகக் கதை. வீம்பு செய்தாலும் முடிவில் அனுதாபத்தை வரவழைப்பது போன்ற ஒரு கேரக்டர். அதில் நடிப்பது நிஜமாகவே ஜெயலலிதாவுக்குச் சவாலாக இருந்தது. 'சிட்டுக் குருவிக்கென்ன கட்டுப்பாடு' என்று வயல்வரப்பில் ஜெயலலிதா துள்ளிக் கொண்டு ஓடி வரும் பாடல், அப்போது இலங்கை வானொலியில் அடிக்கடி ஒலிப்பரப்பான பாடல்.

(தொடரும்)

புலத்தமிழ்ப் பூங்கா-26

சறோ சந்திரகோபால்



# இலண்டன் தமிழ்ச்சங்கம் தமிழ் மொழிப் பண்பாட்டுப் பள்ளி

புலத் தமிழ்ப் பூங்காவின் இருபத்தியாறாவது இதழில், எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்காக முழங்கி மலரும் மலர் East-ham Plashet Grove Roadஇல் அமைந்துள்ள Girls Schoolஇல் நடைபெறும் இலண்டன் தமிழ்ச்சங்கம் நடத்தும் பெருமைமிகு தமிழ்ப்பள்ளி.

20.11.1983இல் சமூகசீலர், ஆன்மீகக் காவலர், தமிழ்ப் புரவலரான திரு.கணபதி அவர்கள் தலைமையில் ஆசிரியர்கள், 10 மாணவர்களுடன் இலண்டன் தமிழ்ச்சங்க மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்ட இப்பள்ளி பின்னர் Little Il ford Schoolஇற்கு இடம் மாறி, கடந்த 12 ஆண்டுகளாக Pashet Grove Girls Scoolஇல் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் பிற்பகல் 1.30 மணி முதல் பிற்பகல் 3.45 மணி வரை நடைபெறுகிறது.

ஏறத்தாழ 28 ஆண்டுகளுக்கு மேலாக இலண்டன் தமிழ்ச்சங்கம் தன்னலமற்ற தமிழ்ச் சேவையினை தமிழ்ப்பள்ளி மூலம் செய்து வருகின்றது. இப்பள்ளியில் ஆண்டு ஒன்று முதல் ஆண்டு பதினொன்று வரையிலான வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. பாலர் வகுப்பில் அபிநயப் பாடல்கள், சிறுகதைகள், படம் பார்த்து வாசித்தல் என மிகவும் இலகுவான, எளிமையான முறையில் தமிழ்மொழி அறிமுகம் செய்யப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து படிப்படியாக மாணவர் அறிவுத் திறனுக்கு ஏற்ப தாய்மொழி நமது சிறார்கள் மனதில் பதிய ஆவன செய்வதில் தமிழ்ச் சங்கம் கண்ணும் கருத்துமாக உள்ளது.

இப்பள்ளியின் இன்றைய இயக்குனரான திரு.முத்து அவர்கள் பள்ளியின் வளர்ச்சி பற்றி விபரித்தார். "ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் பள்ளி ஆரம்பமாகும் முன்னரே பாடத்திட்டங்கள் மற்றும் பள்ளியில் நடைபெறவிருக்கும் நிகழ்வுகள் அனைத்தையும் திட்டமிட்டு வரையறுத்து செயல்படுத்தி வருகின்றோம். எமது தாய்மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, இந்த நாட்டு வாழ்வியல் முறைகளையும் மனதில் கொண்டு, சிறந்த ஆசிரியர்கள் உதவியுடன் சீரிய முறையில் எம் தாய்மொழியை எமது சிறார்களுக்கு ஊட்டுகின்றோம். ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும், பள்ளியின் தரத்தை உயர்த்தும் நோக்கோடு பள்ளி நிர்வாகக் கூட்டங்களை நடாத்தி, நிர்வாக அங்கத்தவர்களின் ஆலோசனையின் பேரில் பல நல்ல திட்டங்களை செயல்படுத்துவதற்கான வழி வகைகளைச் செய்கின்றோம். அத்துடன் பெற்றோர் ஆசிரியர் சந்திப்பினை ஏற்படுத்தி, மாணவர்தம் அறிவுத்தரத்தினை பெற்றோர் கவனத்திற்கு கொண்டு வருவதுடன், அவர்களது வளர்ச்சிக்கான வழிமுறைகளையும் கலந்து முடிவெடுக்கின்றோம். இம்முறை பெற்றோர் ஆசிரியர் உறவை பலப்படுத்துவதோடு, பள்ளியின் வளர்ச்சிக்கும் பெற்றோர் வித்திட உந்துகோலாகின்றது. கற்றலும் கற்பித்தலும் சிறப்பாக நடைபெற வேண்டுமெனும் தமிழ்ச் சங்கத்தின் குறிக்கோளுக்கு அமைய, ஆசிரியர்களுக்கும் தொடர்ச்சியாகப் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதோடு, ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள மாணவர் எண்ணிக்கை, மற்றும் மாணவர் அறிவுத் தரத்திற்கேற்ப உதவி ஆசிரியர்களையும் நியமித்து மாணவர் அறிவுத்திறன் குன்றாது தொடர அயராது முயற்சி செய்து வருகின்றோம். இந்த சந்தர்ப்பத்தில் இலண்டன் தமிழ்ச் சங்கத்தின் பொறுப்பாளர்களாக தொடர்ச்சியாக உழைத்து வரும் தலைவர் திரு.ஷாஜகான் அவர்கள், செயலாளர் திரு.உதயகுமார் அவர்கள், பொருளாளர் திரு.கோவிந்தசாமி அவர்கள், மற்றும் இரவீந்திரன், லீலா இவர்களோடு அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் நன்றியுடன் பாராட்ட விரும்புகின்றேன்" என்று கூறி முடித்தார் இலண்டன் தமிழ்ச் சங்கப் பள்ளியின் இயக்குனர் திரு.முத்து அவர்கள்.

இயக்குனர் அவர்களைத் தொடர்ந்து தலைவர் திரு.ஷாஜஹான் அவர்கள் பள்ளியின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்ற, வகித்த நல்ல தமிழ் நெஞ்சங்களை பற்றி பேசினார். "இப்பள்ளி தொடங்கிய காலம் முதல் இன்று வரை பள்ளியின் வளர்ச்சியுடன் பயணிக்கும் மூத்த உறுப்பினரும், தற்போதைய இயக்குனருமான திரு.முத்து அவர்களது கடின உழைப்பு தமிழ்ச் சங்க வரலாற்றில் பதிவு பெற வேண்டிய விடயம். சங்கத்தின் முன்னைய தலைவரும், தற்போதைய உதவித் தலைவருமான திரு.அந்தோணி அவர்கள் மற்றும் எமது பள்ளி உயர அடித்தளம் அமைத்துத் தந்த அமரர் திரு.கணபதி அவர்கள், முன்னாள் தலைமை ஆசிரியர்களான திருவாளர்கள் ராமவீரசிங்கம், புலவர் மாயவன், சாமி, சுந்தர், திருப்பதி, குமரன், அனீஸ் தமிழரசன், இவர்களோடு பள்ளி வளர்ச்சியின் பின்னணியில் தொடர்ந்து 10 வருடங்களாக சேவை செய்த திருமதி.மல்லிகா சூசைமுத்து அனைவரையும் நேசத்துடனும், நன்றியுணர்வுடனும் நினைப்பதை எனது தலையாய கடமையாக நினைக்கின்றேன்."

இப்பள்ளியில் ஆண்டு இறுதியில், வகுப்புத் தேர்வு நடாத்தப்படுகின்றது. இப்பாடசாலை மாணவர்கள் கேம்பிரிஜ் பல்கலைக் கழகம் நடத்தும் கல்விப் பொதுத் தராதர சாதாரண, உயர்தர தேர்வுகளுக்குத் தோற்றி, (GCE) சிறப்பான சித்திகளைப் பெற்று, ஆசிரியர்களின் கடின உழைப்புக்கு சான்றாக இருப்பதோடு மட்டுமன்றி, பள்ளியின் தர உயர்வினையும் வெளிக் கொணர்கின்றனர். சில ஆண்டுகளுக்கு முன்னர் தமது பள்ளிக்கு வெளியில் சென்று தேர்வு எழுதி வந்த இப்பள்ளி மாணவர்கள் கடந்த 10 ஆண்டுகளாக தமிழ்ச்சங்க தேர்வு மையத்திலேயே தேர்வினை எழுதும் வாய்ப்பினை பெற்று இருப்பது இச்சங்கத்தின் பெருமைக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது.

இப்பள்ளியில் பயிலும் அனைத்து குழந்தைகளினதும் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பளிக்குமுகமாக ஓவியம் வரையும் போட்டியும், மாணவர் உடல் நலம் வளம் பெறும் வகையில் மெய் வல்லுநர் போட்டிகளும் நடாத்தப்பட்டு பள்ளி ஆண்டு விழாவில் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இத்துடன் பள்ளி ஆண்டு இறுதித் தேர்வில் திறமைச் சித்திபெறும் மாணவர்களுக்கு வகுப்பு வாரியாக பரிசுகளோடு சான்றிதழ்களும், பள்ளியளவில் அனைத்து துறைகளிலும் முதன்மையாய் நிற்கும் சிறந்த மாணவன், மாணவிக்கு சான்றிதழ்களோடு கேடயமும் வழங்கி கௌரவிக்கப்படுகின்றனர். பள்ளி ஆசிரியர்களின் கற்பிக்கும் திறனில் ஓர் உந்துதலை ஏற்படுத்தும் முகமாக ஆண்டுதோறும் சிறந்த ஆசிரியை, ஆசிரியரை தேர்ந்து பெருமைப்படுத்தும் ஒரு முறையும் இங்கு நடைமுறையில் இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. அடுத்து, இலண்டன் தமிழ்ச் சங்க செயலாளர் திரு.உதயகுமார் அவர்களிடம் புலத்தமிழ்ப் பூங்காவின் வழமையான கேள்விகளில் ஒன்றான இலண்டன் தமிழ்ச் சங்க நிழலில் வளரும் தமிழ்ப்பள்ளியின் தனிச்சிறப்பு, தனித்துவம் பற்றிய கேள்வியை முன்வைத்தோம். "புலம் பெயர் மண்ணில், பன்முக பண்பாட்டுச் சூழலில், நம் இனிய தமிழ் மொழி, கலை, பண்பாடு, கலாச்சாரம், ஆகியவற்றை மறவாமல் போற்றி, அதன் இறவாப் புகழுக்கு நம்மால் இயன்ற சேவையினை செய்தல் எமது கடமை. அதன் அடிப்படையில் நம் இலண்டன் வாழ் சிறார்களும், நம் எதிர்கால சந்ததியினரும் பயன்பெறும் வகையில் நாம் இப்பள்ளியை நிறுவி நடாத்தி வருகின்றோம். எங்கள் மாணவர்கள் தமிழ் மொழியை மாத்திரம் கற்கவில்லை. தமிழோடு இணைந்த தமிழ் உணர்வு, அந்த உணர்வோடு ஒன்றிய பண்பாடு, பண்பாடு கண்ட கலாச்சாரம், அந்த கலாச்சார வழி வந்த நாகரீகம், அனைத்தையுமே பயில்கின்றார்கள். இதன் விளைவாக, பள்ளிப்படிப்பை முடித்து தேர்வு எழுதிய பின்னரும், எம் இளையோர் எம் சங்கத்துடன் தம்மை இணைத்துக் கொண்டு, இயக்குனர்களாகவும் பொறுப்பேற்று, அடுத்த தலைமுறையினருக்கு எமது மொழி, கலை, கலாச்சாரப் பண்பாடுகளை எடுத்துச் செல்லும் பாலமாக அமைந்து, மகத்தான ஒரு பணியைச் செய்து வருகின்றனர்" - சிந்தைக்கு விருந்தாக அமைந்திருந்தது செயலாளர் திரு.உதயகுமார் அவர்களது பதில்.

புலத்தமிழ்ப் பூங்காவின் இரண்டாவது கேள்விக்குப் பள்ளி இயக்குனரே பதிலளித்தார். "28 வருடங்கள் தமிழ் மொழியுடனும், தமிழ்ச் சமூகத்தினருடனும், தமிழ்க் குழந்தைகளுடனும் நெருங்கிப் பயணிக்கும் உங்கள் மனதில் எழும் எம் சமுதாயம் பற்றிய ஒரு நெருடல், ஆதங்கம் என்ன?"

"நமது தமிழ்ப் பெற்றோர்களின் தமிழ் ஆர்வம், தங்கள் குழந்தைகள் சிறுவயதினராக இருக்கும் பொழுது, மிகவும் அதிகமாக இருக்கிறது. அந்தக் குழந்தைகளுக்கு நமது கலை, கலாச்சாரப் பண்பாட்டு முறைகளை மிகவும் ஆர்வத்துடன் உணர்த்துவதுடன், தமிழ்ப் பள்ளியில் அவர்களை இணைத்துக் கொண்டு பிள்ளைகளுக்கு தமிழ் கற்பிப்பதில் மும்முரமாக செயல்படுகின்றார்கள். பிள்ளைகள் வளர வளர பெற்றோர்களால் தொடர்ந்து அந்த உணர்வினை, கலாச்சாரத்தை வலியுறுத்த முடியாத நிலை ஏற்படுவது வருந்தத்தக்கது. ஆனால், எமது தமிழ்ச்சங்கம் இந்த இடைப்பட்ட காலத்தில் இளையோர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஏற்படும் தொய்வினை நிவர்த்தி செய்ய, தமிழ்ச்சங்கம் மூலம் பல நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது. ஆண்டுதோறும் எமது சங்கம் நடத்தும் பொங்கல் விழா இதற்கு ஒரு சான்றாகும். பெற்றோர்களாகிய நாம் எமது பிள்ளைகளை கலாச்சார சீரழிவில் சிக்காது தவிர்க்க, சிறுவயதிலேயே தமிழ்ப் பள்ளிகளில் இணைத்து, எமது வரலாற்றுப் பண்பாட்டைக் கட்டிக் காப்பாற்ற முன்வர வேண்டும். இது தமிழர்களாகிய எமது தலையாய கடமை." மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு இவற்றை இளவயதிலேயே குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற கூற்றை எவரும் மறுக்க முடியாது.

இலண்டன் மாநகரில் உள்ள பழமை மிக்க தமிழ்ப் பாடசாலைகளுள் ஒன்றெனும் பெருமையைக் கொண்ட இத்தமிழ்பள்ளி, கிழக்கு இலண்டன் வாழும் தமிழ்ச் சிறார்களது தாய்மொழி வளர்ச்சியில் காட்டும் ஆர்வம், அவர்தம் மொழிக்கு ஆற்றி வரும் தொண்டு அளப்பரியது, போற்றத்தக்கது. 28 வருடங்கள் அந்நிய மண்ணில் தமிழோடு வாழ்ந்து, வளர்ந்து, நாம் தமிழர் என்று வெற்றி நடைபோடும் தமிழ்ச் சங்கப் பள்ளி பேரோடும், புகழோடும் பல்லாண்டு வாழ, வளர, வாழ்த்தி விடை பெறுகின்றது, புலத்தமிழ்ப் பூங்காவின் இதழ் இருபத்தியாறு.

**தொடர்புகட்கு: 0208 471 7672.**

**பாலர் வகுப்பில் அபிநயப் பாடல்கள், சிறுகதைகள், படம் பார்த்து வாசித்தல் என மிகவும் இலகுவான, எளிமையான முறையில் தமிழ்மொழி அறிமுகம் செய்யப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து படிப்படியாக மாணவர் அறிவுத் திறனுக்கு ஏற்ப தாய்மொழி நமது சிறார்கள் மனதில் பதிய ஆவன செய்வதில் தமிழ்ச் சங்கம் கண்ணும் கருத்துமாக உள்ளது.**

## 2012 உங்களுக்கு எப்படி?

5ம் பக்கத் தொடர்ச்சி




நிலைகளிலே நிதானம் தேவை. திருமணம் போன்ற சுப காரியங்களும் சற்றுக் கூடுதலான முயற்சியிலே செயற்பட வேண்டும். உங்கள் எண்ணின் அதிபதி குருபகவான். எதையும் சிந்தித்து நிதானமாக செயற்பட்டு வெற்றி காண்பதில் உங்களுக்கு நிகர் யாருமில்லை எனலாம். அதே நேரம் உங்களின் தேவையை மட்டுமே முன்னிலைப்படுத்தி நீங்கள் செயற்படுவதும், எதையும் தான்தோன்றித்தனமாக செய்து முடிப்பதும் உங்கள் செயற்பாடுகள். யாருக்காகவும் உங்களின் சுய கொள்கைகளை விட்டுக் கொடுக்கமாட்டீர்கள். ஒரு விடயத்தை எடுத்துக் கொண்டால் சலிப்படையாமல் போராடுவீர்கள். எதுவுமே உங்களுக்கு கிடைக்கவேண்டிய நேரத்திலே கிடைக்காமல் பின்பு தாராளமாய் கிடைக்கின்ற நிலை இருக்கும். எனவே இந்த 2012ம் ஆண்டில் உங்களுக்கு அனுகூலமான பலன்களுக்கு நல்ல இடமுண்டு. உங்களின் கூட்டு எண் அல்லது பெயர் எண் 5, 7, 1ல் அமையப் பெறின் எதிர்பாராதவகை திடீர் அதிஷ்டங்கள் அமைய இடமிருக்கும். புஷ்பராகம் உங்களின் அதிஷ்ட ரத்தினம். தெட்சணா மூர்த்தி வழிபாடு நன்மை தரும்.

**முயற்சியோடு செயற்பட்டு வெற்றிபெறுக!**

**4 13 22 31**

**திகதிகளில் பிறந்தவர்கள்**

### நற்குணமும், நாணய செயற்பாடும் கொண்ட நான்காம் எண் அன்பர்களே!

உங்களின் எண்ணிற்கு 2012ம் ஆண்டு எதிர்பாராதவகை நன்மைகள் அமையக்கூடிய நிலைகள் உண்டு. தொழில் நிலைகளில் நல்ல முன்னேற்றம் அமையும். குடும்பத்தில் சிறுசிறு மந்த நிலை இருக்கும்.



எண்ணில் ஆண்டு 2012 மலர்வதனால் பெரும் சிரமங்கள் ஏற்படாது. இருப்பினும், இடையிடையே சிறுசிறு பிரச்சனைகள் ஏற்பட்டு மறையும். புதிய முயற்சிகளில் சற்று நிதானத்துடன் செயற்படவேண்டும். உறவினர்களின் மூலம் தேவையற்ற வீண் பிரச்சனைகளை எதிர்கொள்ள நேரிடும். பண விடயங்களில் கொடுக்கல், வாங்கல் விடயங்களில் மந்தமான செயற்பாடு அமைந்திருக்கும். எந்த விடயம் என்றாலும் நிதானத்துடன் செயற்படுவது மிகவும் நல்லது. பெண்களுக்கு மனச் சஞ்சலம், யோசனை சற்று அதிகமாகவே இருக்கும். மாணவர்களுக்கு கல்வி நிலையில் அனுகூலமான பலன்கள் அமையும் நிலையுண்டு. பொறுமையும், நிதானமும் மிகவும் நன்மை தரும். 5ம், 7ம் எண்களின் ஆதிபத்தியம் அமையப் பெறுவதனால் திடீர் நன்மைகள் அமையும் பலனுண்டு. பொதுவாகவே எல்லோருக்கும் உதவி செய்கின்ற அற்புதக் குணம் கொண்டவர்கள் நீங்கள். வாழ்க்கையில் அடிமட்ட நிலையில இருந்து முயற்சியின் மூலம் முன்னுக்கு வந்து சமூகப் பிரபல்யம் பெறுகின்ற ஆளுமை நிறைந்தவர்கள் நான்காம் எண் அன்பர்கள். எதையும் விடாமுயற்ச்சி கொண்டு செயற்பட்டு வெற்றிகளை காண்பீர்கள். உங்களுக்கு வேண்டியவர்கள் அனைவரும் நல்லாய் இருக்கவேண்டும் என்கின்ற எண்ணம் கொண்ட உங்களுக்கு வாழ்வில் எதோ ஒரு வகையில் மனச்சஞ் சலம், பிரச்சனை, யோசனை போன்ற ஏதேனும் ஒரு பிரச்சனை தொடர்ந்த வண்ணமே அமைந்திருக்கும். பிரச்சனையே இல்லாமல் சந்தோஷமாக நீங்கள் இருந்தால் அது ஆச்சரியமே. உங்களின் அதிஷ்ட ரத்தினக்கல் கோமேதகம், அதிஷ்ட தெய்வ வழிபாடு விநாயகர். இவை உங்களுக்கு அனுகூல பலன்கள் தரும்.

**2012ம் ஆண்டில் நீங்கள் ஓரளவிற்கு நற்பலன்களை பெறக்கூடிய நிலை உண்டு. அதற்கு ஏற்புடைய முயற்சியும், செயலும் கொண்டு வெற்றிகளை பெற்றிடுக!**

**5 14 23**

**திகதிகளில் பிறந்தவர்கள்**

### அஞ்சாத நெஞ்சமும், அனைவரையும் வசீகரம் செய்யும் தன்மையும் கொண்ட ஐந்தாம் எண் அன்பர்களே!

உங்களுக்கு 2012ம் ஆண்டு மிகவும் சிறப்பான, அதிஷ்டமான பலா பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றிகள் ஏற்படும். தொழில் நிலையிலே சிறப்பான முன்னேற்றங்கள் இருக்கும். எதிர்பார்ப்புகளில் நல்ல வெற்றிகள் அமையும். குடும்பத்தில் மகிழ்வும், சுபகாரிய நிலைகளும் ஏற்படுகின்ற நிலை இருக்கும். வெளிநாட்டு பிரயாணங்களை எதிர்பார்க்கின்றவர்களுக்கு அப்பலன் பூரணமாக கிடைக்கும் நிலையுண்டு. உங்களின் ஆதிபத்திய எண்ணாகிய 5ம் எண்ணில் 2012ம் ஆண்டு பிறக்கின்றது. அதிஷ்டங்கள் உங்களை அரவணைக்கும் ஆண்டாக இது உங்களுக்கு அமையும். அதுமட்டுமின்றி உங்களின் பெயர் எண், கூட்டு எண் என்பன 1ம் 7ம் எண்களில் அமையப் பெறின் இரட்டிப்பு அதிஷ்டங்கள் அமையும் நிலையுண்டு. தொழில் நிலையில் பதவி உயர்வும் தொழில் சார்ந்த வெளிநாட்டு பிரயாணங்களும் அமையும் நிலை உண்டு. பெண்களுக்கு மனமகிழ்வான விடயம் ஏற்படும். மாணவர்களின் கல்வி நிலையில் சிறப்பான முன்னேற்றம் அமையும். கடன் பிரச்சனைகளில் சுமூகமான பலன்கள் ஏற்படும். பொதுவாகவே எல்லோரையும் அனுசரித்து செயற்படுகின்ற குண இயல்பு கொண்டவர்கள் நீங்கள். தொழில், குடும்பம், சமூகம் என எல்லா நிலைகளிலும் மேன்மையோடு இருப்பவர்கள். மற்றவர்களுக்கு உதாரணம் காட்டும் நிலையில் உங்களின் செயற்பாடுகள் அமைந்திருக்கும். தனித்துவம் என்கின்ற நல்வார்த்தை உங்களுக்கே மிகவும் பொருந்தும். அந்த அளவிற்கு எல்லா விடயங்களிலும் மற்றவர்களைவிட வித்தியாசமாகவும் புதுமையாகவும் செய்து, தனித்துவமாக பிரகாசிப்பவர்கள். 2012ம் ஆண்டு உங்களுக்கு மிகவும் சிறப்பானதாகவும் பூரணத்துவ பலன்களை வாரி வழங்குகின்ற நிலையிலும் அமையும் என்பதில் ஐயமில்லை. உங்களின்



அதிபதி விஷ்ணு வழிபாடும், "வைரம்" அதிஷ்டக்கல்லும் அணிந்து கொள்ளலாம்.

**நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்ற பல விடயம் இந்த ஆண்டில் அடையக் கூடிய வாய்ப்புகள் நிறையவே உண்டு. அதற்கு ஏற்ப உங்களின் செயற்பாட்டை நகர்த்தி வெற்றிபெறுக.**

**6 15 24**

**திகதிகளில் பிறந்தவர்கள்**

### அழகும் ஆர்ப்பரிக்கும் கவர்ச்சிகரமும் கொண்ட ஆறாம் எண் அன்பர்களே!

உங்களுக்கு 2012ம் ஆண்டு சற்றுச் சிரமங்கள் இடையிடையே ஏற்படுகின்ற நிலை அமையும். எந்த விடயம் என்றாலும் பொறுமை, நிதானத்துடன் செயற்பட வேண்டும். தொழில் நிலைகளில் அலைச்சலும், இழுபறி நிலைகளும் அமையும். குடும்பத்தில் தேவையற்ற வீண் பிரச்சனைகள் இடையிடையே ஏற்படும் நிலை



இருக்கும். பணவரவு சற்று மத்திமமான நிலையிலே இருக்கும். எந்த விடயம் என்றாலும் உடனேயே முழுமையாக செய்து முடிக்க முடியாத இழுபறிகள், தாமதங்கள் அமைந்திருக்கும். சுப காரியங்களை எதிர்பார்க்கின்றவர்களுக்கு அப்பலன் சற்று மத்திமமாகவே அமையும் நிலை இருக்கும். எதையும் அவசர கெதியில் செய்து முடிப்பதை தவிர்ப்பது மிகவும் நல்லது. உங்களுக்கு 5ம் எண்ணில் அமையும் ஆண்டின் பலன் ஓரளவிற்கு அனுகூல பலன் கொடுக்கும். கூட்டு எண் 7ம் வார எண் 1ம் சற்று இழுபறி நிலைகளை கொடுக்கும். உங்களின் பெயர் எண் அல்லது கூட்டு எண் 5ம், 7ம், 1ம் எண்ணில் அமைந்திருந்தால் எதிர்பாராத வகையில் திடீர் அதிஷ்டங்களும், நன்மைகளும் அமையும் நிலை இருக்கும். மற்றும், வியாபார தொழில் புரிவோர்க்கு சற்று நன்மைகள் அமையும். வெளிநாட்டு பிரயாணங்களை எதிர்பார்க்கின்றவர்கட்கு அப்பலன் சற்று முயற்சியின் பின்னரே கிடைக்கும். யாரையும் எளிதில் உங்கள் வசம் சிக்கவைக்கும் அழகும், வசீகரமும் கொண்டவர்கள் நீங்கள். எந்த நேரத்தில் எதை செய்யலாம் என்பதில் மிகவும் தெளிவாக இருப்பீர்கள். உங்களின் சுய நலத்தையே முழுமையாக பார்த்துக் கொள்ளும் நீங்கள், அதற்காக எதையும் செய்வீர்கள். யார் பக்கம் காற்று வீசுகின்றதோ அங்கே ஒட்டிக் கொண்டு உங்கள் திட்டங்களை நிறைவேற்றி விடுவீர்கள். உங்களை நம்பி யாரும் எந்தக் காரியத்திலும் செயற்பட முடியாது என்பது மெய்.

**2012ம் ஆண்டில் பெரும் நன்மைகள் அமைய பலன் சற்றுக்குறைவே. அதற்கு ஏற்ப செயற்படவும். முருகன் வழிபாடு நன்மை தரும். மரகதப் பச்சை அதிஷ்ட ரத்தினக்கல் அணியவும். உங்கள் முயற்சியால் வெற்றி பெறுக!**

**7 16 25**

**திகதிகளில் பிறந்தவர்கள்**

### எதையும் ஏற்கும் மனப்பக்குவம் கொண்ட ஏழாம் எண் அன்பர்களே!

உங்களுக்கு 2012ம் ஆண்டு சிறப்பானதாகவே அமையும் நிலை இருக்கும். உங்களின் எண் ஆதிபத்தியமே இந்த ஆண்டின் கூட்டு எண்ணாக அமைந்திருப்பது சிறப்பான அம்சம். எனவே தொழில் நிலைகளில் எதிர்பார்ப்புகள் நிறைவேறுகின்ற பலன் இருக்கும். புதிய முயற்சிகள் வெற்றிகளை தரும் நிலைகள் இருக்கும். குடும்பத்தில் மகிழ்வும், நற்பலன்களும் அமையும் நிலை இருக்கும். பெண்களுக்கு குடும்ப நிலையில் சற்று மனச்சஞ்சலம் இடையிடையே ஏற்பட்டு மறையும். இருப்பினும் சுமூகமான பலாபலன்கள் அமைய இடமுண்டு. பணவரவு மிகவும் சிறப்பான நிலையில் அமையும். உறவினர்களின் மூலமாக நற்பலன்கள் அமையும். தொழில் சார்ந்த பதவி உயர்வுகள், வெளிநாட்டு பிரயாணம் போன்ற பலாபலன்கள் அமைய இடமுண்டு. உங்களின் எண்ணிற்கு மிகவும் அனுகூலமான 5ம் எண்ணும், உங்கள் 7ம் எண்ணும் சேர்க்கை பெற்ற நிலையில் இந்த ஆண்டு பெரும்பாலும் நன்மைகள் அமைய இடமுண்டு. வார எண் 1ம் எண்ணில் அமைந்திருப்பது இடையிடையே சிறு சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு மறைகின்ற நிலை இருக்கும். எனவே அதற்கு ஏற்ப உங்களின் செயற்பாடுகளை அமைத்துக் கொள்வது மிகவும் நல்லது. இடையிடையே சிறுசிறு மருத்துவ செலவுகள் ஏற்பட்டு மறையும் நிலைகள் இருக்கும். மாணவர்களுக்கு கல்வி நிலையில் முன்னேற்றகரமான பலன்கள் அமையும். உயர்கல்வி நிலையிலும் மேன்மைகள் அமையும் நிலையுண்டு. பொதுவாகவே எதையும்



8 17 26

தீகதிகளில் பிறந்தவர்கள்

### ஏற்றம் மிகு குணமும், எதிர்பாராத வெற்றியும் கொண்ட எட்டாம் எண் அன்பர்களே!

உங்களுக்கு 2012ம் ஆண்டு சற்று மத்திம, சுமாரான பலனே கொடுக்கும். எந்த விடயம் என்றாலும் மிகவும் பொறுமை, நிதானத்துடன் செயற்பட வேண்டும். எடுக்கின்ற முயற்சிகளில் தடை, தாமத, இழுபறி நிலை தொடரும். தொழில் நிலைகளில் வேலைப்பளு சற்று அதிகமாக இருக்கும். குடும்பத்தில் மத்திமமான மந்த பலன்களே அமைகின்ற நிலை இருக்கும். எனவே இவற்றுக்கு ஏற்ப உங்களின் செயல்பாட்டை, நிலைப்படுத்திக்கொள்ள வேண்டும். பணவரவு சற்று மத்திமமாகவே அமைகின்ற நிலையுண்டு. உறவினர்களுடன் சிறுசிறு மனச்சஞ்சலங்கள், தேவையற்ற பிரச்சனைகள் என்பன அமையும் நிலைகள் ஏற்படும். பெண்கள் பொறுமையுடனும், நிதானத்துடனும் செயற்பட வேண்டும். மாணவர்கள் கல்வி நிலையில் மிகவும் நிதானமாக செயற்படவேண்டும். உங்களின் பெயர் எண், கூட்டு எண் என்பன 5ம் 7ம் 1ம் எண்களில் அமைந்திருப்பின் எதிர்பாராதவகை திடீர் நன்மைகள் அமையக்கூடிய பலன்கள் அமைந்திருக்கும். இந்த ஆண்டில் நீங்கள் எந்தப் புதிய விடயம், புதிய முயற்சி தொடங்கினாலும் அது நல்ல வெற்றியைத் தருவது தாமத நிலைப்பாட்டிலேயே அமையும். எனவே அதற்கு ஏற்புடையதாகவே பொறுமையும், நிதானமும் கொண்டு செயற்படவும். பொதுவாகவே சாதனை வீரர்கள் நீங்கள் என்றே கூறலாம். நல்லதோ, தீயதோ எந்த விடயம் என்றாலும், அதிலுள்ள எட்டாம் எண் அன்பர்களின் பேச்சு முதன்மை நிலை பெறும். உங்களின் பெயர் பேசப்படவேண்டும் என்கின்ற நிலையிலே நல்லவர் யார், கெட்டவர் யார் என்று தெரியாது. பழகிவிட்டு பின் பல சிரமங்களையும் நீங்கள் சந்திப்பதுண்டு. இருப்பினும் துணிவும், தைரியமிக்க செயற்பாடும் உங்களிடம் இருந்தே அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டும். நீங்கள் நினைக்கின்ற விடயத்தை அடைய எதையும் செய்யத் துணிவீர்கள். உங்கள் ராசி நாத தெய்வம் சிவன் வழிபாடும், உங்களின் அதிஷ்ட ரத்தினக்கல் நீலம் அணிவதும் மிகவும் சிறப்பான பலனை தரும்.

**எதையும் நிதானத்தோடு செய்து 2012ல் வெற்றி பெறுக!**

9 18 27

தீகதிகளில் பிறந்தவர்கள்

### ஒப்பற்ற முயற்சியும் ஓயாத போராட்டமும் கொண்ட ஒன்பதாம் எண் அன்பர்களே!

உங்களுக்கு 2012ம் ஆண்டு ஓரளவிற்கு அனுகூலமாக அமையும் நிலை உண்டு எடுக்கின்ற முயற்சிகளில் இழுபறி, தாமத நிலைகள் தொடரும். தேவையற்ற வீண் அலைச்சல் நிலைகள் இருக்கும். தொழில் நிலைகளில் சிறுசிறுபிரச்சனைகளை சந்திக்க நேரிடும் நிலைகள் இருக்கும். குடும்பத்தில் மந்த நிலைகளும், மன உலைச்சல் நிலையும் அமைந்திருக்கும். எதையும் பொறுமையாகவே கையாள வேண்டும். பணவரவு மத்திமமாகவே அமையும் நிலை உண்டு. கடன் நிலைகளில் இழுபறி, தாமத நிலை தொடரும். மாணவர்கள் கல்வி நிலையில் கூடுதலான முயற்சி மேற்கொள்ள வேண்டும். பெண்களுக்கு தேவையற்ற சிறுசிறு சஞ்சலங்கள் ஏற்பட்டு மறையும் பலனுண்டு. உங்களின் கூட்டு எண், பெயர் எண் என்பன 5ம், 7ம் 1ம் எண்களில் அமையப்பெறின் திடீர் நன்மைகளும் அதிஷ்ட பலன்களும் ஏற்படும் நிலை உண்டு. உங்களின் பொறுமையே இந்த ஆண்டில் உங்களுக்கு அனுகூலமான பலன்களை



கொடுக்கும். உறவினர்கள், நண்பர்களின் மூலம் தேவையற்ற வீண் பிரச்சனைகள் அமையும் நிலையுண்டு. பொதுவாகவே போராட்டம் நிறைந்தவர்கள் நீங்கள். எந்த விடயத்தையும் எடுத்த எடுப்பிலேயே செய்து முடிக்கின்ற நிலை உங்களிடம் இருக்காது. ஏதோ ஒரு வகையில் சற்று போராட்டம் நிறைந்ததாகவே உங்களின் பலன் இருக்கும். நீங்கள் நினைக்கும் விடயங்களை சாதிப்பதிலே சலிப்பு இல்லாமல் முயற்சி செய்வீர்கள். எதற்கும் எவருக்கும் பயம் கொள்ள மாட்டீர்கள். உங்களின் முடிவே உங்களுக்கு திருப்தி அளிக்கும் குணம் கொண்டவர்கள். ஆதிக்கதனமான குண இயல்பு உங்களுடன் கூடவே உள்ளதாகும். அம்மன் வழிபாடு அனுகூலமான பலன் தரும். உங்களின் அதிஷ்ட ரத்தினக்கல் பவளம் அணிவது மிகவும் நல்லது.

**பொதுவாக 2012ம் ஆண்டு உங்கள் முயற்சியின் மூலமே வெற்றிகள் உண்டு. அதற்கேற்ப செயற்பட்டு அனுகூல பலன்கள் பெறுக!**

ஆராய்ந்து செயற்படும் ஆற்றலும், திறனும் கொண்டவர்கள் நீங்கள். சமாளிக்கின்ற செயற்திறன் அதிகமாகவே உங்களுக்கு அமைந்திருக்கும். நல்ல மேன்மையான ஆளுமைத்திறன் அதிகம் கொண்டவர்கள் நீங்கள். எதைச் செய்யினும் அதில் உயர்நிலையில் செயற்படும் உங்களுக்கு ஏதோ ஒரு வகையிலே சிறு குறைபாடும் தொடர்ந்த வண்ணம் இருக்கும். எல்லா வகையிலும் பூரணமான நிறைவை நீங்கள் பெற்றுக் கொள்வது என்பது சற்றுச் சிரமமே. உங்களுக்கு 2012ம் ஆண்டு அனுகூலமானதாகவே அமையும். எடுக்கும் முயற்சிகளும் வெற்றிகள் தரக்கூடியதாய் இருக்கும். அம்மன் வழிபாடு உங்களுக்கு அனுகூலமான பலன் தரும். உங்களின் அதிஷ்ட ரத்தினக் கல் வைடூரியம் அணிவதும் சிறப்பான அனுகூலமே.

**எதையும் நினைத்து பின் வருவதை நன்குணர்ந்து செயற்படும் உங்களுக்கு 2012ம் ஆண்டிலே உங்கள் செயற்திறனின் மூலமாக நற்பலாபலன்களை பெற முடியும்.**


தமிழகத்தின் மிகச்சிறந்த நம்பர் 1 ஜோதிடம்



வெற்றி பெற

உங்கள் மகளுக்கோ, மகனுக்கோ என்ன பெயரில், என்ன ராசியில், எந்த நட்சத்திரத்தில், எத்தகைய வரன் அமையும் என்பதை முன்கூட்டியே அறிந்து கொள்ளலாம். தங்களது ஜாதகம் மூலம் எந்த தொழில் செய்தால் வெற்றியும், செல்வமும் பெறலாம் என்பதை அறியலாம். தங்களது ஜாதகம் மூலம் தங்கள் ராசி எண் ராசி கலர், ராசியான வாசப்படி திசை ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம். தங்களுக்கும், குழந்தைகளுக்கும் கடைகளுக்கும் கம்பெனிகளுக்கும் மிகவும் ராசியான பெயர் அமைத்துக்கொடுக்கப்படும்.

**தபால் வழி ஆலோசனை மற்றும் முக்கிய விவரங்கள் அனுப்பி வைக்கப்படும்**

51-A, அருணாச்சலம் ரோடு, வடபழனி, சென்னை-93. இந்தியா

# வெற்றி விநாயக ஜோதிடம்

Ph:0091-44-4201 3111, 0091-44-4503 -1111

E-mail: aWonastro@yahoo.com / aWinastro@yahoo.com ❖ Website : www.aWinjyotish.com

# லண்டனில் சிலிர்க்க வைத்த பொங்கல் விழா!





மேள தாளத்துடன், உணர்வுபூர்வமான தமிழ் கலைகளான ஆடல், பாடல் என்று உயிர்ப்போடு தைப்பொங்கல் விழா லண்டன் ஹரோ கவுன்சிலில் சமீபத்தில் மெய்சிலிர்க்க வைத்தன. ஹரோ கவுன்சில் சேம்பரில் தமிழ் மணத்தது. தமிழோடு தன்னை முழுமையாகப் பிணைத்துக் கொண்டு, தமிழீழ விடுதலை உணர்வாளராக அர்ப்பணத்தோடு செயல்பட்டு வரும் ஹரோ கவுன்சிலர் லண்டன் பாபா என்ற சுரேஷ் கிருஷ்ணாவின் எண்ணத்தில் உருவான இந்த தைப்பொங்கல் விழா கருணா குணரத்தினம், ஹரோ கவுன்சிலர் சசிகலா சுரேஷ் ஆகியோர் ஏற்பாட்டில் அன்றைய பொழுது சிறப்பாக நடைபெற்றது. இரண்டாவது ஆண்டாக, ஹரோ கவுன்சில் ஆதரவில் நடந்த இவ்விழாவை நகர பிதா சவுத்திரி மிர்னால் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். கட்சி வேறுபாடு இன்றி ஹரோ நகரசபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என இந்திய, பங்களாதேஷ், பாகிஸ்தான் சமூகத்தினர் தமிழின் அதி உன்னத கலை, பண்பாடுகளைப் பார்த்து மகிழ்ந்தனர்.

நாதஸ்வர தவில் வாத்திய இசை அனைத்து இன சமூகத்தையும் ஈர்த்தது. பரதநாட்டியம் மனதைக் கவர்ந்தது. வீணை இசை இதயத்தைக் கொள்ளை கொண்டது.

ஹரோ தமிழ் பாடசாலை, ஹரோ தமிழ் FINEARTS, மிடில்செக்ஸ் தமிழ் அகடமி, ஹரோ முதியோர் இல்லம், கென்டன் தமிழ் பாடசாலை, மிடில்செக்ஸ் கிரிக்கெட் கிளப் ஆகிய அமைப்புகளின் சங்கமத்தில் கலை நிகழ்ச்சிகள் மிளிர்ந்தன.

“தமிழ்க் கலை, கலாச்சாரத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். எங்களுடைய அடையாளங்கள் அழிந்து விடக்கூடாது. இளைய சமுதாயம் நம் பண்பாடுகளை மறக்காது வாழ வேண்டும். இதுவே இன்றைய தைப்பொங்கல் விழா” என்று தன்னுரையில் குறிப்பிட்டார் கவுன்ஸிலர் லண்டன் பாபா சுரேஷ் கிருஷ்ணா.

இனிப்பான பொங்கல் வழங்கி சுவைக்க வைத்த தைப்பொங்கல் நிகழ்ச்சி இனிப்பாகவே இருந்தது.

- **தமிழன்**





1ம் பக்க தொடர்ச்சி

## மனிதநேய நடைப்பயணங்கள்

மூவரும் கடும் சிரமத்தின் மத்தியிலும், மனம் தளராது உறுதிநடை மேற்கொள்ளும் ஏக காலத்தில் அனைத்துலக போர்க்குற்ற விசாரணைக்குழு அமைக்கப்பட வேண்டும் என்ற செய்தி தாங்கிய அஞ்சல் அட்டைகள் ஊடாகவும், துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும் தமிழீழ உணர்வாளர்களால் விழிப்புணர்வுப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஈழத்தமிழ் மக்களின் இலட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் நீதிக்கான நடை பயணத்தின் நோக்கத்தையும், தமிழ் மக்கள் மீது சிறீலங்கா அரசாங்கம் மேற்கொண்ட இன அழிப்பு, அதன்போது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களை அம்பலப்படுத்துவதன் மூலமே வெளிநாடுகளின் ஆதரவையும்,

வெளிநாட்டு மக்களின் ஆதரவையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும் என நடை பயணத்தை மேற்கொள்ளும் உறவுகள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே, கடும் குளிர், மற்றும் காற்றின் மத்தியில் இடம்பெறும் நடைபெறும் நடை பயணம், மற்றும் அஞ்சல் வழி விழிப்புணர்வுப் போராட்டங்களிற்கு புலம்பெயர்ந்த சிறீலங்கா அரசாங்கம் மீதான போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தி, இன அழிப்பை அம்பலப்படுத்த துணை நிற்க வேண்டும் எனக் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

VIJAY TV பார்க்க...

தமிழ் தொலைக்காட்சி புதிய இணைப்புகள்

அனைத்து விதமான தமிழ் தொலைக்காட்சி வானொலி நிகழ்ச்சிகள் சிறப்பான முறையில்

திருத்த வேலைகளுடன் DIGITAL, MPEG-4 தொழில் நுட்பத்துடன்!

உடன் அழையுங்கள்!!

எமது விசேட கழிவு

VIJAY TV பார்க்க ஒரு வருட சந்தா மற்றும் பொருத்தும் செலவு உட்பட £149 பவுண்ஸ் மட்டும்!

விஜய் ரிவி ஒரு வருட சந்தா கார்ட் £59 மட்டுமே!

கோபிநாத் : 0750 847 270, 020 8248 5594

கிருபா : 074 2463 9666, 020 8682 2666

DUBBLE LNP குறைந்த கட்டணத்தில் பொருத்திக் கொடுக்கப்படும்.

இலவச சானல்களைப் பார்ப்பதற்கு சந்தா அட்டையுடன் மலிவான விலையில் RECEIVER பொருத்திக் கொடுக்கப்படும்

NANTHAN SATELLITE

07581423532
07440 056 339

European Award for Languages 2007 Winner

TALA (Estd : 1984)

# தமிழ்மொழிக் கலைக்கழகம்

வழங்கும்

# முத்தமிழ் விழா

நாள் : 31 மார்ச் 2012

இடம் : SYDENHAM SCHOOL

Dartmouth Road SE26 4RD

நிகழ்ச்சி விவரங்கள்

போட்டிகளில் பரிசுபெற்ற நிகழ்ச்சிகள்

சிறப்புக் கலை நிகழ்ச்சிகள், பரிசு வழங்குதல்

இவ்விழாவை முன்னிட்டு எதிர்வரும் 2012 பெப்ரவரி மாதம் 26, மார்ச், மார்ச் 11 ஆகிய திகதிகளில் 5 வயதிலிருந்து 21 வயதுவரை உள்ள அனைவருக்கும் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, பாட்டுப் போட்டி, திருக்குறள் மனனப்போட்டி, குழு பாட்டுப்போட்டி, நடனப்போட்டிகளும் நடைபெறவுள்ளன. அத்துடன் தனி நபர்களும் அனைத்து தமிழ்ப்பாடசாலை மாணவர்களும் பங்குகொள்ளலாம்.

போட்டி விரங்கள் பெற தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்:

020 8851 9096, 0795 147 6706

மின்னஞ்சல்: pillaisiva@gmail.com



"தமிழன் இல்லாத நாடில்லை
தமிழனுக்கென்று ஒரு நாடில்லை...."

- தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன்

தமிழர் புத்தாண்டில்

# தமிழன்

தரணியெங்கும் தமிழ்

பத்திரிகையாளனின்
அனுபவ முத்திரை பளிச்சிட...

உலகத்தமிழருக்காக லண்டனிலிருந்து
ஒரு மாத சஞ்சிகை

உலகத்தில் எந்த மூலையில் நீங்கள் வாழ்ந்தாலும்,
உங்கள் வாசல் தேடிவரும்

02087678004, 07735346890

இது ஒரு **புதினம்** வெளியீடு

## POST OFFICE விற்பனைக்கு

லண்டனில், HANGER LANE இல் POST OFFICE உடன் CONVIENCE STORES விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு.

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

07799372158, 07975602602

## Jullie's After School Tutorial

தமிழ் பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகள் Grammer Schoolக்குப் போகவோ, 11+ சோதனை சித்திபெற வேண்டுமோ, கவலையை விடுங்கள். கடந்த எட்டு ஆண்டுகளுக்குள் 62 பிள்ளைகள் Grammer School க்குப் போயிருக்கிறார்கள். 11+ சோதனைக்குத் திறம்பட பயிற்சி அளித்து வருகிறோம். Jullie's After School Tutorial ஐ நாடுங்கள். classes will conducted at our wallington premises.

Phone : 0780 0920 873

வெளிவருகிறது!

# தமிழ் ஓலைகள் 2012

வழமைபோல் தமிழ் புத்தாண்டு அன்று தமிழ் ஓலைகளின் 19வது பதிப்பு வெளிவருகிறது. தங்கள் விபரங்கள், விளம்பரங்களை இணைக்க விரும்புவோர் தயவு செய்து உடனடியாக தொலைபேசி, தொலைநகல், தபால் அல்லது மின் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.

Contact:

020 8543 2126/ 01792 202 682/ 020 8942 8745

Mobile: 0771 800 3838

07986 429 848 / 0771 800 3839

52 Kingsley Road, Wimbledon, London SW19 8HF

Fax: 020 8540 3442

email: editor@tamilpages.com Web: www.tamilpages.com

தமிழரின் சேவைக்கு தமிழ் ஓலைகள்

# Tele Medicine
## தொலைபேசி மருத்துவ சேவை

**உலகமெல்லாம் HOMOEO CARE மருத்துவ சேவை**



ஒரு தொலைபேசி அழைப்பே போதும்!
அனைத்து விதமான நோய்கள் குறித்தும்
தொலைபேசியில் டாக்டருடன் பேசி,
மருததுவ சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.
இவ்விதமான சேவையால் நோயாளர்கள் பெரிதும்
பயன்பெறுகிறார்கள். மருந்துகளையும்
பெறுவதற்குச் சுலபமான, சுகமான வழி இது.
லண்டனில் : 020 8144 1553, 020 8767 8004
**Web Site : www.doctorontelephone.com**

### உடல்வலிக்கு நிரந்தர நிவாரணம்!

வலி என்பது இப்போது ஒரு பெரும் பிரச்சனை. முதுகுவலி, தோள்பட்டை வலி, கால் வலி, கை வலி என்று உடம்பு வலிகள் இன்று பலருக்கு. தினசரி மனிதர்களுக்கு ஒவ்வொரு வகையான வலிகள்.

அழற்சிக்கு ஆளாகும் தசைநார்கள்தான் இந்த விதமான வலிகளுக்குக் காரணமாகின்றது. மக்களுக்குத் தூக்கத்தில் ஒரு ஒழுங்குமுறை இருப்பதில்லை. தூக்கத்தையும், உடல் ஓய்வையும் ஏற்படுததம் ஹார்மோன் குறைவது இதற்கு ஒரு காரணம். மாதவிடாய் நிற்கிற காலத்தில் இந்தப் பிரச்சனை அதிகம் வருகிறது. எந்த வித வைத்தியப் பரிசோதனையின் போதும், அனைத்துமே நன்றாகவே இயங்குகின்றன. இவற்றுக்கெல்லாம் ஹோமியோபதி வைத்தியத்தில் மிக நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது. உணவு, உடற்பயிற்சி போன்றவற்றுடன், ஹோமியோபதி வைத்தியத்தினால் (பக்க விளைவுகளற்ற) முற்றாக நிவர்த்தி செய்யப்படும்.




ஒரே தலையிடியாக இருக்கிறது என்று சொல்கிறபோது, அவர்கள் படுகிற அவஸ்தையை முகத்தில் பார்த்தே புரிந்து கொள்ளலாம். இந்தத் தலையிடியைப் போன்ற வலி வாழ்க்கையில் எதுவுமே இல்லை!

கண்நோய், வெயிலில் செல்லுதல், இருட்டில் இருத்தல், இரத்த அழுத்தம், பல் சொத்தை, பசி, சைனஸ், கண்நீர் அழுத்தம் போன்றபல காரணங்கள் இதற்குக் காரணம்.

மைக்ரேன் என்ற ஒற்றை மைக்ரேன் தலையிடி இருக்கிறதே, அதைச் சரியானபடி கவனிக்காவிட்டால், வேறு சில பாதிப்புகள் உடலில் ஏற்படும். வாதம், இதயத்தில் பாதிப்பைக் கூட ஏற்படலாம்.

தலையிடி என்றதும் மருந்துக் கடைக்குப் போய் மாத்திரைகளை வாங்கிப் போடுவது நமது பழக்கம். அது தற்காலிமானதே! நிரந்தரமான தீர்வுக்கு ஹோமியோபதி முழுமையான தீர்வை வழங்குகிறது.

### விரைவான பலன் அளிக்கும் ஹோமியோபதி மருத்துவம்!

ஜெர்மன் நாட்டில் தோன்றிய உலகின் மிகப்பெரிய மாற்று மருத்துவம் ஹோமியோபதி. கத்தியின்றி, இரத்தமின்றி அகிம்சை வழியில் நோய்களை குணமாக்கும் சக்தி படைத்தது. இந்த மருத்துவம் நாட்டு மருத்துவம் என்றும், சித்த மருத்துவம் என்றும் தவறான கருத்து மக்களிடம் நிலவி வருகின்றது. ஆனால் இந்த மருத்துவம் முற்றிலும் ஜெர்மனியில், டாக்டர் சாமுவேல் ஹனிமன் என்பரால் கண்டு பிடிக்கப்ட்டது. எந்த வித பக்க விளைவும் ஏற்படாத பாதுகாப்பான பூரா குணம் அளிக்கக்கூடிய மருத்துவம் ஹோமியோபதி. இந்த மருத்துவத்தைக் கண்டு பிடித்த ஹனிமன், ஆங்கில மருதத்துவத்தில் எம்.டி., பட்டம் பெற்றவர். அந்த மருத்துவத்தில் அதிருப்தி ஏற்பட்டு, ஹோமியோபதி சிக்ச்சை முறையே சிறந்தது என்று முடிவு செய்து, தமது சேவையை அர்ப்பணித்தார். இந்த மருத்துவம் மிக மெதுவாகக் குணப்படுத்தும் என்கிறது தவறான கருத்து. சரியான நேரத்தில் சரியான திறமையான மருத்துவரிடம் சிக்ச்சை பெற்றால், மிக விரைவில் குணமாகும் என்பதே உண்மை.

### அலர்ஜி, HAYFEVER

அலர்ஜிகளுக்கு முக்கிய சிகிச்சை அளிக்கிறோம். சம்மர் வருகிறது HAYFEVER என்ற கண்கடி, மூக்குக் கடி, தொண்டைக்கடி, அடுக்கான தும்மல், மூக்கிலும், கண்களிலும் நீர் வடிதல் என்பன உங்களை வாட்டி எடுக்கிறதா? பூக்கள் பூக்கும் காலத்தில் POLLEN என்ற மகரந்தந்தால் ஏற்படும் இந்த நோய்களுக்கு ஹோமியோபதியில் பூரண தீர்வு உண்டு.

### ஹோமியோபதி மருத்துவத்தில் சிறப்பு சிகிச்சை

சைனஸ், தலைவலி, மைக்ரேன் தலைவலி, வெண் புள்ளிகள் (Leucoderma), மூட்டுவலி (Arthritis), மூலநோய் (Piles), சிறுநீரக கற்கள், பித்தப்பை கற்கள், வயிற்றுப்புண், சோரியாசிஸ், தோலில் ஏற்படும் அனைத்து வியாதிகள் மற்றும் குழந்தைபேரின்மை (Sterility), ஆண்மைக்கு குறைபாடு (Impotency), மணவாழ்க்கை குறித்த பயம், நம்பிக்கையின்மை போன்ற நோய்களுக்கு சிறப்பு சிகிச்சை உட்பட பல நோய்களுக்கும் சிறப்பு சிகிச்சையளிக்கப்படுகிறது.

**ஹோமியோபதி மருத்துவம் பாதுகாப்பானது; நிரந்தர நிவாரணம் அளிக்கக்கூடியது!**

ஹோமியோபதி வைத்திய நிபுணர் டாக்டர். ஆர்.தியாகராஜன் அவர்களிடம் உலகெங்கும் பல்வேறு நாடுகளிலிருந்தும் மக்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். நேரில் சந்தித்து அல்லது தொலைபேசி வழியாகத் தொடர்பு கொண்டு அவரிடம் மருத்துவ சிகிச்சை பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சிகிச்சை பெற விரும்புவோர், HOMOEO CAREஇன் மின் அஞ்சல் வழியாகவும் சிகிச்சை பெற வாய்ப்புகள் செய்யப்பட்டுள்ளன. நேரடியாக வர முடியாதவர்களுக்கு உலகத்தின் எந்தப் பாகத்தில் நீங்கள் வாழ்ந்தாலும் சிகிச்சை முறை மற்றும் மருந்துகள் உடனடியாக தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

**லண்டனில் டாக்டர் ஆர்.தியாகராஜன் தொடர்புகளுக்கு: 02081441553, 02087678004, 07833 341 693**

அவுஸ்திரேலியா : 0280 144 553, அமெரிக்கா : 06466 66 9603, திருச்சி : 0091 431 2432046, 0091 431 2432946, கொழும்பு : 0722934800 077760 2513

டென்மார்க் : 036981553 E-mail : homoeocare@rediffmail.com / website : homoeocare.com